www.tamilarangam.net

# தெலுங்கானா போராட்டம்

வி.பி.சிந்தன்

புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெலுங்கானா போராட்டம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

**வி.பி. சிந்தன்**

**தமிழ்ப் புத்தகாலயம்**

#8, மாசிலாமணித் தெரு பாண்டிபஜார்
தி.நகர் சென்னை - 600 017 ☎ 4345904
மின் அஞ்சல் : tamilputhakalayam.vsnl in
tamilputhakalayam@yahoo.com
Website : www.intamm.com/tamilputhakalayam

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தெலுங்கானா போராட்டம்**
முதற் பதிப்பு : ஜூன், 1986
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 1990
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி, 2000

**விலை ரூ. : 24.00**

**THELUNGANA PORATTAM**

By **V.P. CHINTHAN**
© V.P. Chinthan
Third Edition : Feb, 2000
Pages : 96
8, Masilamani Street
Pondy Bazaar, T.Nagar
Chennai - 600 017
✆ 4345904
Email : tamilputhakalayam@vsnl.com
tamilputhakalayam@yahoo.com
Website : www.intamm.com/tamilputhakalayam
Price : **Rs.24.00**

Laser Typeset at : **Stanbic Laser Graphics**, Ph : 8239192
Printed at : Malar Printers, Chennai - 600 034.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

இந்திய வரலாறு ஆயுதந் தாங்கிய எழுச்சிகள் பலவற்றைச் சந்தித்துள்ளது.

'சந்தால்' போராட்டத்திலிருந்து தெலுங்கானா போராட்டம் வரை எத்தனையோ போராட்டங்களை இந்திய மக்கள் நடத்தியுள்ளனர்.

நமது வரலாற்றின் வீரம் மிக்க அத்தியாயங்களும் இவை தாம். வரலாற்றாசிரியர்கள் மூடி மறைத்த பேருண்மைகளும் இவைதாம்.

இவற்றில் தெலிங்கானா போராட்டம் இந்திய அரசியல் அரங்கில் இதுவரை தொடப்படாத புதிய சிகரங்களைத் தொட்டது. புதிய திசை வழிகளைத் திறந்து விட்டது.

இது குறித்து நான் பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளேன். அச்சொறபொழிவுகளில் கலந்துகொண்ட ஊழியர்கள் பலரின் நிர்ப்பந்தமே இச்சிறுநூல்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சிறப்பு மிக்கத் தலைவர்களில் ஒருவரும், தெலிங்கானா போராட்டத்தின் உன்னதமான தளபதியுமான மறைந்த தோழர் சுந்தரய்யா அவர்கள் எழுதிய நூலே இச்சிறு வெளியீட்டுக்கு முழு ஆதாரம்.

வரலாற்று மாணவர்களுக்கும், சமூகத்தில் புரட்சி-கரமான மாற்றத்தைக் காண விழைபவர்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவுமென்று நம்புகிறேன்.

இந்நூலை வெளியிட்டு உதவிய தமிழ்ப் புத்தகாலயத்-தாருக்கும் எனது நன்றி.

தோழமையுடன்

**வி.பி. சிந்தன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சமர்ப்பணம்

இந்திய வரலாற்றின்
ஒரு புதிய அத்தியாயத்தைத்
தனது ரத்தத்தால்
இட்டு நிரப்பி
தெலுங்கானா மண்ணில்
எக்காளம் முழங்கிய
வீரத்தியாகிகளுக்கு....!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. எது வரலாறு?

"வன்முறை நடவடிக்கைகளுக்குச் சிறிதும் இடமளிக்காத நாடு, நமது நாடு. பன்னெடுங்காலமாக இந்நெறியைப் போற்றிப் பாதுகாத்து வருகிற மண், நமது மண். அகிம்சா நெறியின் விளைநிலம், நமது இந்தியா.

நமது தேச விடுதலைகூடக் 'கத்தியின்றி ரத்தமின்றி'ப் பெறப்பட்டதுதான்!

நமது வரலாறும் இப்படித்தான்; நாம் விடுதலை பெற்றதும் இப்படித்தான்.

மேற்கத்திய கலாச்சாரத்திலிருந்து நம்மை மாறுபடுத்திக் காட்டுவதும் இச்சிறப்பிற்குரிய அம்சம்தான்"

-என்று பலரும் சொல்வதைக் கேட்டிருக்கலாம்.

இந்தக் கூற்றுகள்தான் எவ்வளவு அபத்தமானவை!

இது...உண்மைக்குப் புறம்பானது மட்டுமில்லை. வரலாற்றையே திருத்திக் கூறுகிற முயற்சி.

நமது விடுதலைப் போராட்ட வரலாறு அப்படித் தானா?

நீண்ட போராட்டங்கள் எத்தனை? ஆயுதமேந்திய எழுச்சிகள் எத்தனை? ரத்தப்பலிகள் எத்தனை? மகத்தான தியாகங்கள் எத்தனை?

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று-பம்பாயில் ஏற்பட்ட கப்பற்படை வீரர்களின் எழுச்சி!

1946 பிப்ரவரி, பம்பாய் துறைமுகம்-

www.tamilarangam.net



கப்பற்படை வீரர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு எதிராகத் துப்பாக்கியைத் திருப்புகிறார்கள்.

இவர்களை ஒடுக்க பிரிட்டிஷ் அரசு ராணுவத்தை அனுப்புகிறது. பெரும் சண்டை மூள்கிறது.

இதைத் தொடர்ந்து, இந்தியச் சிப்பாய்களும் கப்பற்படைவீரர்களுக்கு ஆதரவாகக் கலகக் கொடியை உயர்த்துகிறார்கள்.

தேசமெங்கும் போராட்டம் பற்றிப் பரவுகிறது.

நாடு முழுவதிலும் ஹர்த்தால்களும் வேலை நிறுத்தங்களும் செய்து, தொழிலாளர்களும் மார்தட்டித் தெருவிலே இறங்குகிறார்கள்.

வெள்ளை அதிகாரிகள், வெள்ளை ராணுவ வீரர்கள் இவர்களோடு நேரடியான துப்பாக்கிச் சண்டை நடக்கிறது.

வெள்ளையர் ஆட்சியுடன் கடுமையான மோதல்...

ஆனால்-

இவற்றை அங்கீகரித்து, மக்களை உத்வேகமூட்டி, போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேசீய இயக்கத் தலைமை...

எந்தவித அசைவும் காட்டாது, சுரணையற்று மரத்துக் கிடந்தது.

முதலில் மௌனம் சாதித்தது; பின்னர் இது தவறான போராட்டம் என்று விவாதித்தது.

இறுதியில் கொடூரமான முறையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் போராட்டம் நசுக்கப்பட்டது. இருப்பினும் இந்தியாவில் உதயமாகும் புதிய எழுச்சியைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய ஆட்சியினர் சமரசம் செய்யவும் இந்தியாவுக்குச் சுதந்திரம்வழங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்படியெல்லாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுதமேந்திப் போராடி, அடக்குமுறைகளைச் சந்தித்து, உயிர்த்தியாகம் செய்து ரத்தம் சிந்தித்தான் நமது விடுதலை வரலாற்றின் ஒவ்வொரு வரியும் எழுதப் பட்டிருக்கிறது.

பிப்ரவரி 1946க்கு முன்பு மிகப்பெரிய அளவில் நாடு தழுவிய போராட்டங்கள் மூன்று முறை நடந்திருக்கின்றன.

இம்மூன்று போராட்டங்களும் காந்தியடிகள் தலைமையில்-வழிகாட்டுதலில்தான் நடைபெற்றன.

ஏன் அப்போதெல்லாம் சுதந்திரம் கிடைக்கவில்லை? ஏன் நாடு விடுதலை பெறவில்லை?

அதற்கு முன்பெல்லாம் வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் சொல்வதுண்டு-

“இந்தியா-பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகுடத்தை அணி செய்கிற ஓர் ஒப்பற்ற ரத்தினம்.

ஆகையால் இந்தியாவை இழக்க நாங்கள் ஒருக்காலும் சம்மதியோம். இந்தியாவை இழந்தால் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே அஸ்தமித்து விடும்” என்று.

இவ்வாறு சொன்னவர்கள் அதற்கேற்ப நடந்தும் கொண்டார்கள்.

எத்தனைப் போராட்டங்கள் நடந்தாலும், இந்தியாவின் மீதுள்ள தங்கள் பிடி சிறிதும் தளராமல் பார்த்துக் கொண்டார்கள்.

சிறிது தளர்ச்சி ஏற்பட்டாலும் மேலும் கிடுக்கி கொண்டு கடுமையாக இறுக்குகிற நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள்.

காந்தியடிகள் தலைமையிலே நடந்த போராட்டங்களெல்லாம் உச்சநிலையை அடைந்த போது,

அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த சர்ச்சிலிடம்-

“இந்தியா விடுதலை பெறவேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் விருப்பமும், அவரின் தலைமையேற்றுப்

www.tamilarangam.net



போராடிக் கொண்டிருக்கிற கோடிக்கணக்கான இந்திய மக்களின் விருப்பமும். இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்குச் சர்ச்சில்,

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிதறுண்டு போவதைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்பதற்காகவோ, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவை வழி நடத்துவதற்காகவோ, நான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை! இதுதான் எனது பதில்!" என்று இறுமாப்புடன் சொன்னார்.

ஆனால்... இதே சாம்ராஜ்யத்தின் அதிபதிகள் பிப்ரவரி 1946இல் கப்பற்படை வீரர்களின் எழுச்சியேற்பட்ட போது என்ன சொன்னார்கள் தெரியுமா?

அப்போது பிரதமராயிருந்த கிளாமெண்ட் அட்லி சொல்கிறார்:-

"1920-21 களிலோ, 1930-31 களிலோ அல்லது 1942ம் வருடத்தின் போதோ இந்தியாவில் இருந்த அரசியல் தட்ப வெப்பநிலை இப்போது நிலவவில்லை.

இப்போது மக்களின் நாடித்துடிப்பு முற்றிலும் வேறு விதமாக இருக்கிறது.

முற்றிலும் மாறுபட்ட இந்தச்சூழலில் இந்தியாவிற்கு ஒரு புதிய தீர்வு, அவசியம் தேவை."

ஆயுதந்தாங்கிய போராட்டமும், ராணுவக் கலகமும், மக்களின் பேரெழுச்சியும்தான் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை இவ்வாறு பேசிட நிர்பந்தித்தது.

இதை யாரால் மறுக்க முடியும்?

சிலர் சொல்லலாம்.

'தொழிற்கட்சி (Labour Party) ஆட்சிக்கு வந்தது அதனால்தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது' என்று.

www.tamilarangam.net



ஆனால், அதற்கு முன்பே தொழிற்கட்சி அதிகாரத்தில் இருந்ததுண்டே? அப்போதெல்லாம் ஏன் விடுதலை கிடைக்கவில்லை?

உண்மையில், மாறிய உலகச் சூழ்நிலையும் இந்தியாவில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியும் தான் இதற்குக் காரணம்.

ஹிட்லர்-முசோலினியின் வீழ்ச்சியும், சோவியத் செஞ்சேனையினர் பெற்ற மகத்தான வெற்றியும் இதனால் உலக அரசியல் அரங்கிலே ஏற்பட்ட தாக்கமும் தான்,

இந்தியாவை மட்டுமல்லாது இலங்கை, பர்மா, இந்தோனேசியா போன்ற நாடுகளையெல்லாமும் காலனி-யாதிக்கத்திலிருந்து விடுபடச் செய்தது.

ஆனால் வரலாற்றாசிரியர்களில் பெரும்பான்மையினர் இந்தப் பேருண்மைகளை மறைக்கப் பார்க்கிறார்கள்.

ஆயுதப்புரட்சியையும் அடிப்படையான சமூக மாற்றத்தையும் அவர்கள் அறவே வெறுக்கிற காரணத்தால்,

எதார்த்தத்தின் தொற்று நோயிலிருந்து தூர விலகி மிகுந்த பாதுகாப்போடு இருந்துகொண்டு வரலாற்றை எழுதுகிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் எழுதி வைத்த நாட்குறிப்புகளையெல்லாம் 'இதுதான் வரலாறு' என்று நம்பச் செய்கிறார்கள்.

பல்கலைக் கழகங்களில் இருந்து பள்ளிக்கூடங்கள் வரை நமக்குக் கிடைக்கும் வரலாற்றுப் புத்தகங்கள் எல்லாம்...

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அளித்ததுதான்.

காரல் மார்க்சால், 'முதல் இந்தியச் சுதந்திரப்போர்' என்று வர்ணிக்கப்பட்ட 1857 இல் நடைபெற்ற-படைவீரர்களின் எழுச்சிகூட நமக்குச் 'சிப்பாய்க் கலகம்' என்ற பெயரில்தான் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது.

www.tamilarangam.net



பல நூல்கள்-

பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக நடைபெற்ற எந்தவொரு மக்கள் எழுச்சியையும் 'போராட்டங்கள்' என்று சொல்லக் கூடத் தயாராயில்லை. மாறாக,

கல்வியறிவு பெறாத காட்டுமிராண்டிகள் நடத்திய வன் செயல்கள் என்றும், அராஜகங்கள் என்றும், 'கொள்ளைக்-காரர்களின் கலகம்' என்றும்தான் வர்ணிக்கின்றன.

அதனால்தான்,

இந்தியாவின் வரலாற்றை இன்னும் ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

அண்மையில் சிலர் இம்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்-கள். நல்ல வெற்றியும் கண்டு வருகிறார்கள். மேலும் இம் முயற்சி உற்சாகத்தோடு தொடரப்பட வேண்டும்.

உண்மையில்-

பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவில் வேரூன்ற ஆரம்பித்ததிலிருந்து இந்திய மக்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

1857, இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று வர்ணிக்கப்படுகிற சிப்பாய்க் கலகத்திலிருந்து 1946 பிப்ரவரியில் நடைபெற்ற கப்பற்படை வீரர்களின் எழுச்சி வரை...

இடைக் காலத்தில் நடைபெற்ற எத்தனையோ போராட்டங்கள், மக்கள் எழுச்சிகள் இது பற்றியெல்லாம் முழுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டி-யிருக்கிறது.

இந்தப் போராட்டங்கள்,

இது தொடர்பாக மேலதிகாரிகள் ஆட்சியாளர்-களுக்குச் சமர்ப்பித்த ரகசிய அறிக்கைகள்;

www.tamilarangam.net



இப்போராட்டங்கள் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்திய நிர்ப்பந்தங்கள்;

நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து ஆட்சியாளர்களால் அமைக்கப் பெற்ற விசாரணைக் குழுக்கள்; அக்குழுக்கள் அரசிற்கு அளித்த பரிந்துரைகள்;

அது மட்டுமல்லாது

இப்போராட்டங்கள் நடைபெற்ற ஒவ்வொரு பகுதியிலும், மக்களிடம் நிலவி வருகிற செவி வழிச் செய்திகள்;

இப் போராட்டங்களில் பங்கேற்ற மகாபுருஷர்களை வாஞ்சையோடு நினைவுகூரும் வீர காதைகள்-

இவற்றையெல்லாம் துருவிப் பரிசீலித்துப் பார்த்தால்...இதுவரை தென்படாத பேருண்மைகளெல்லாம் நமக்குத் தெரிய வரலாம்.

இந்தியாவில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிரிட்டிஷார்-

நிரந்தரத் தீர்வை (Permanent Settlement) என்ற பெயரில் ஒரு புதிய நிலச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தனர்.

இதன் மூலம்

பலருக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள் கைப்பற்றப்பட்டு ஒரு சிலரிடம் ஒப்படைக்கப்பட்டன.

நிலங்கள் மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வரிப் பணமெல்லாம் அந்த ஒரு சிலர் மூலமாகவே வசூலிக்கப்பட்டது.

ஜமீன்தாரி? முறை என்பது இப்படித்தான் அறிமுகமானது.

இந்த நிரந்தரத் தீர்வை முறையால் பல நூற்றாண்டுகளாகப் பலருக்குச் சொந்தமாயிருந்த நிலங்களெல்லாம்

www.tamilarangam.net



ஜமீன்தார்களுக்குச் சொந்தமாக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஒருவரே வைத்திருக்கக்கூடிய நிலையை இது உருவாக்கியது.

பல நூற்றாண்டுகளாக அந்நிலத்தைச் சொந்தம் கொண்டாடி வந்த ஏழை விவசாயிகள், அந்நிலத்தைப் பயிரிடுவதற்கும், அந்நிலத்தில் விவசாயம் செய்கிற உரிமையைப் பெறுவதற்கும்.

நிலவரி என்றும், குத்தகை என்றும் அதிகமான தொகையை அல்லது தானியத்தை ஜமீன்தார்களுக்குக் கொட்டியளக்க வேண்டியிருந்தது.

இதனால், ஜமீன்தாரின் கொடுமைகளையும், வரிச்சுமையையும் தாங்கமுடியாத மக்கள், கிராமம் கிராமமாக இடம் பெயர்ந்து காடுகளுக்குச் சென்று குடியேறினார்கள்.

காடுகளை அழித்துக், கழனியாக்கி அந்நிலங்களையும் விளை நிலமாக மாற்றி மக்கள் வாழ்க்கையை நடத்துகிற போது,

சட்டத்தின் கொடூரமான கரம் அங்கேயும் நீண்டது.

ஜமீன்தார்கள், கொள்ளைக்கார அரசின் உதவியோடு அந்நிலங்களையும் பறித்தார்கள்.

தங்கள் நிலங்கள் அநியாயமாகப் பறிக்கப்படுவதைக் கண்டு பொறுக்காமல் விவசாயிகள் கொதித்தெழுந்தார்கள்.

ஜமீன்தார்களுக்கு எதிராக, வெள்ளையர்களின் ஆட்சிக்கெதிராக ஆயுதமெடுத்துப் போராடினார்கள்.

இந்த முறையில் வெடித்துக் கிளம்பியதுதான் 1755-56இல் நடைபெற்ற ‘சந்தால் கலவரம்’.

இந்திய வரலாற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போராட்டம் இறுதியில் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

www.tamilarangam.net



இதே போன்று, 1860ல் வங்காளத்தில் இன்டிகோச் செடி (சலவைக்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை நீலச்செடி) பயிர் செய்து வந்த தோட்ட விவசாயிகளின் பயங்கரமான எழுச்சியொன்று நடைபெற்றது.

சந்தால் கலவரமோ, பறிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்காக நடைபெற்ற போராட்டம்.

ஆனால் இந்தப் போராட்டம் தோட்ட முதலாளி-களாயிருந்த வெள்ளையர்களுக்கு எதிராக நடந்த போராட்டம்.

இதே சமயத்தில்தான் மகாராஷ்டிரத்திலே தாங்க முடியாத வரிவிதித்தலை எதிர்த்து மராட்டா விவசாயிகள் கொதித்துக் கிளம்பினார்கள்.

இப்படித் தொடர்ந்து பல போராட்டங்கள் ஆங்காங்கே வெடித்துக் கிளம்பின.

1921இல் கேரளாவிலுள்ள முஸ்லீம் விவசாயிகள் வெள்ளைக்கார ஆட்சியை எதிர்த்து நடத்திய மாபெரும் போராட்டம்தான் மாப்பிள்ளைக் கலகம்.

ஆந்திராவில் அல்லூரி சீதாராம ராஜூ தலைமையில் நடந்த ஆயுதமேந்திய போராட்டம் ஆகியவற்றைக் குறிப்பாக சொல்ல முடியும்.

பிரிட்டிஷார் மீது துவேஷத்தைப் பரவச் செய்த பல போராட்டங்கள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நடைபெற்றன.

ஆனால்...தெலுங்கானா மக்கள் நடத்திய போராட்டம்-ஒரு புதிய எல்லைகளைத் தொட்டது.

இது-

இதற்கு முன் நடைபெற்றிருந்த அனைத்துப் போராட்டங்களிலிருந்தும் குணாம்சத்தில்-தன்மையில்-முற்றிலும் மாறுபட்டிருந்தது.

www.tamilarangam.net



கொடுமைகளை எதிர்த்து, நியாயமான உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்த மக்களின் ஆயுதம் தாங்கிய எழுச்சி என்பது மட்டுமல்ல...

இப்போராட்டம்-

இந்திய அரசியல் அரங்கில்

இது வரை எழுப்பப்படாத வினாக்களையெல்லாம் எழுப்பி அவற்றிற்கு விடை காண முயற்சித்தது.

நில உடைமையில் எந்த விதமான மாற்றம் வேண்டும்? சமூகத்தில் புரட்சிகரமான மாறுதலை உருவாக்குவது எவ்வாறு?

-என்ற வினாக்களையெழுப்பி அரசியல்-சமூக-பொருளாதாரப் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து, உண்மையின் வேர்களுக்கு வெளிச்சம் பாய்ச்சியது.

அனைத்துப் பகுதி மக்களையும் புரட்சிக்கு இட்டுச் செல்கிற சீரிய நோக்கோடு, கம்யூனிஸ்ட் கட்சியினரின் தலைமையில் செம்பதாகையின் தாள் நிழலில் நடைபெற்ற மகத்தான மக்கள் போராட்டமாக இது விளங்கியது.

பிரிட்டிஷாரால் சிப்பாய்க் கலகம் என்று வர்ணிக்கப்பட்ட முதல் இந்திய சுதந்திரப் போரின் போது, இந்தியச் சிப்பாய்கள் வெள்ளையர்களை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார்கள்.

ஆனால் அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கியவர்களுக்கு இச் சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் எந்த விதமான கண்ணோட்டமும் இருந்ததில்லை.

நிலப்பிரபுக்கள், குறுநில மன்னர்கள் இவர்களின் ஆட்சியதிகாரம் காப்பாற்றப்பட வேண்டும். பிரிட்டிஷார் இதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்றுதான் அந்தப் போராட்டத்திற்குத் தலைமையேற்ற ஜான்சிராணி, தாந்தியா தோபே முதலியோர் கருதினார்கள்.

www.tamilarangam.net



*19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் சரி, அதற்குப் பின்னர் நடைபெற்ற போராட்டங்களிலும் சரி...எந்த விதமான தீர்க்கமான கண்ணோட்டங்களும் இருந்ததில்லை.*

*தேசீய இயக்கத்தின் தலைமையிலே நடைபெற்ற எந்தவொரு எழுச்சியும், இந்திய அரசியலின் மையமான விவசாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு நடத்தப்பட்டதல்ல.*

*"நான் விரும்பும் சுதந்திர இந்தியாவில் மன்னர்களும் உண்டு; குடிகளும் உண்டு. அங்கு நிலப்பிரபுக்களும் இருப்பார்கள்; விவசாயிகளும் இருப்பார்கள். அதுதான் என்னுடைய ராமராஜ்யம்!"*

*என்றுதான் காந்தியடிகள் சொன்னார்.*

*நிலப்பிரச்னைக்குத் தீர்வு காணுகிற கண்ணோட்டம் காந்தியடிகளிடத்திலோ அவரது காந்தீயத்திலோ அறவே, இல்லை.*

*அதனால்தான்,*

*தீர்வு காணப்பெறாத இந்த விவசாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்கிற வரலாற்றுக் கட்டாயம் ஏற்படுகிறது.*

*இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட எழுச்சியில் இவை வலுக்கட்டாயமாக முன்னுக்குத் தள்ளப்படுகிறது...*

*இதனுடைய ஒரு உயர்ந்த வடிவம்தான் 'தெலுங்கானா போராட்டம்.'*

*இந்தப் போராட்டம்-*

*இந்தியாவின் அரசியல்-சமூக-விஞ்ஞானத்தில் இதுவரை புலப்படாத பல பிரச்னைகளை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டியது.*

www.tamilarangam.net



இந்தியத் தேசத்தில் மட்டுமல்ல...கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் ஒரு பெரிய தாக்கத்தை இது உண்டு பண்ணியது.

மக்கள் ஜனநாயகப் புரட்சியை உருவாக்க வேண்டிய வழிமுறைகள் என்ன? இதற்கு வழி காணும் தத்துவ நடைமுறைகள் யாவை? என்பது குறித்துச் சர்ச்சைகள் கட்சிக்குள் எழுந்தன.

ஆயுதப் போராட்டத்தின் பல்வேறு வடிவங்கள் பற்றியும் இந்திய அரசின் வர்க்கத் தன்மை என்ன என்பது பற்றியும் ஒரு ஆழமான கருத்து மோதலையும் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோற்றுவித்தது.

உயர்வேகத்தில் நிகழ்ந்த இந்தக் கருத்து மோதல்கள் தான் பிற்காலத்தில் கட்சி பிளவு படுமளவிற்கு அழைத்துச் சென்றன... இதை இங்கு நாம் பார்க்கலாம்.

www.tamilarangam.net

# 2. காங்கிரஸ் கட்சியும் சமஸ்தான மக்கள் போராட்டமும்

தேச விடுதலைக்காக இந்திய மக்கள் நடத்திய போராட்டங்களின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக விளங்குபவைதான், மன்னர்கள் ஆட்சி செய்த சமஸ்தானங்களில் நடைபெற்ற போராட்டங்களெல்லாம்.

வடக்கே காஷ்மீர் சமஸ்தானத்திலிருந்து தெற்கே திருவிதாங்கூர் சமஸ்தானம் வரை நூற்றுக்கணக்கான சமஸ்தானங்களில் மன்னர்களே ஆட்சி செய்து வந்தனர்.

இப்படிப் பல சமஸ்தானங்களில் உள்ள மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக மட்டுமல்ல, தங்களை ஆண்ட சுதேசி மன்னர்களுக்கெதிராகவும், நிலப்பிரபுத்துவக் கொடுமைகளுக்கெதிராகவும் கிளர்ந்தெழுந்தனர்.

இவற்றில் வரலாற்றில் ஒரு அழுத்தமான முத்திரையைப் பதித்ததுதான் ஹைதராபாத் மன்னனுக்கெதிராகத் தெலுங்கானா மக்கள் நடத்திய தீரஞ்செறிந்த போராட்டம்.

இதுபற்றியெல்லாம் சொல்ல வருகிறபோது, இப்போராட்டங்கள் நடைபெற்றகாலம், அப்போதிருந்த அரசியல் சூழல், உலக அரங்கில் அவற்றின் பின்னணிகள், இவை பற்றியெல்லாமும் முதலில் சொல்லியாக வேண்டும்.

முதலில் குறிப்பிடப்பட வேண்டியது 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி.'

தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களை அடக்கியாளவும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இரண்டு விதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள்.

ஒன்று-மக்களிடையே உள்ள மதவேற்றுமை. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே உள்ள சிக்கல்களைக் கூர்மைப்படுத்தி அவர்களைத் தங்களுக்குள்ளே மோதவிடுவது; இதன் மூலம் தங்கள் ஆட்சிக்கெதிரான போராட்டங்களைப் பின்னடையச் செய்வது... சீர்குலைப்பது... மக்களைத் திசை திருப்புவது.

மற்றொன்று-சுதேசி மன்னர்கள்.

அன்றைக்கு இருந்த சுதேசி மன்னர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குக் கப்பம் செலுத்துகிறவர்களாகவும், விசுவாசமானவர்களாகவும் இருந்து வந்தனர்.

மக்களை அடக்கியாள்வதற்கும், தன்னிஷ்டம் போல் வரி வசூலிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை இருந்தது.

இம்மன்னர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இருந்ததோடு மட்டுமல்லாது, ஆரம்பகாலத் தேசிய இயக்கத்தின் பிரதிபலிப்புகள் எதுவும் சமஸ்தான மக்களை எட்டா வண்ணம் பார்த்துக் கொண்டார்கள்.

பிரிட்டிஷ் நேரடி இந்தியாவில் நடைபெற்ற எந்தவொரு எழுச்சியிலும் சமஸ்தான மக்கள் கலந்துகொள்ள முடியாத படி, தடுக்கிற ஒரு தடுப்புச் சுவராக, சுதேசி மன்னர்களைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பயன்படுத்தினார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு நெடும் தூண்களாக விளங்கிய இந்த அம்சங்களையெல்லாம் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் தலைமை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

சமஸ்தானங்களில் நடைபெறுகிற எந்தக் கொடுமைகளையும் கண்டிப்பதற்கு முன்வரவும் இல்லை.

இதற்குக் காரணம் உண்டு.

காங்கிரஸ் மிதவாதிகளே அன்றைக்கு ஆதிக்கம்

www.tamilarangam.net



செலுத்தி வந்தார்கள். அவர்களின் பழமையான கருத்தும் குறுகிய நோக்கமும், சுதேசி மன்னர்கள் மீது அவர்களுக்கு இருந்த அளப்பரிய பாசமும் இவற்றிற்குக் காரணங்களாய் அமைந்தன.

அதனால்தான், 'சமஸ்தானங்களில் காங்கிரஸ் கமிட்டியும் கூடாது, இயக்கமும் கூடாது' என்பதில் கவனமாக இருந்தார்கள்.

சமஸ்தான மக்களிடையே தேசிய இயக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற எண்ணமோ அல்லது பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராக அனைத்து இந்திய மக்களையும் திரட்ட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தோ அன்றைக்கு இருந்த காங்கிரஸ் தலைமைக்கு அறவே இருந்ததில்லை.

1930-31இல் காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் போது கூட, சமஸ்தானங்களில் உள்ள தேசியப்பற்று கொண்டவர்கள் சமஸ்தானங்களில் மறியல் செய்யாமல் பிரிட்டிஷாரின் நேரடி ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் வந்து மறியல் செய்தார்கள்.

ஆட்சியாளரின் சதி, காங்கிரஸ் தலைமையின் முறையற்ற போக்கு இப்படிப் பல தடைகளையும் மீறித்தான் 1935லிருந்து சமஸ்தான மக்களின் போராட்டங்கள் பல ரூபங்களில் வெடித்துக் கிளம்பின.

காந்தியடிகள் உட்பட பல காங்கிரஸ் தலைவர்கள் இந்தப் போராட்டங்களை அங்கீகரிக்காத ஒரு போக்கைக் கடைப்பிடித்து வந்த காலம் அது.

இந்தச் சமயத்தில்தான், கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டு-கள், இடதுசாரி மனோபாவம் கொண்டவர்கள் எல்லாம் சமஸ்தான மக்கள் போ்ராட்டங்களில் நேரடியாக இறங்கினர்.

நிலப்பிரபுத்துவ அட்டூழியங்களை எதிர்த்து, தாங்க முடியாத வரிக் கொடுமைகளை எதிர்த்து, பிரஜா உரிமை

www.tamilarangam.net



*மற்றும் அனைத்து ஜனநாயக உரிமைகள் மீதும் தொடுக்கப் படுகிற தாக்குதல்களை எதிர்த்துப் பலவிதமான போராட்டங்கள் மூண்டன.*

*1930-31இல், காந்தியடிகள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்கள் எதிர்பார்த்த பலனையளிக்கவில்லை. இது காங்கிரஸ் கட்சியிலிருந்த இளைஞர்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியது.*

*'காந்தியடிகளின் போராட்ட முறைகள் மாற்றியமைக்கபட வேண்டும், கட்சியின் அணுகுமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்' எனும் கருத்துக்கள் இளைஞர்களிடத்தில் தலைதூக்கின.*

*இதே நேரத்தில், உலக அரங்கில் ஒரு கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. முதலாளித்துவ நாடுகள் தொழில் நெருக்கடியினால் பாதிப்புக்குள்ளாயின. ஆனால்...சோவியத் யூனியனிலுள்ள சோஷலிச அரசிற்கு இந்நெருக்கடிகள் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை...மாறாக, சோவியத் மக்கள் தொழில்துறையினிலும், விவசாயத் துறையினிலும் மாபெரும் வெற்றிகளைச் சாதித்தனர்.*

*அங்கு, சமூக அமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது...பண்ணையடிமை முற்றிலும் ஒழிக்கப்பட்டிருந்தது.*

*அதன் அரசியல் சட்டமானது, மனிதகுலம் இதுவரை கண்டிராத, கேட்டிராத, சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது.*

*பல்வேறுபட்ட தேசிய இனங்களின் சிறைச்சாலையாக விளங்கிய ஜாரின் ருஷ்யா..., பல்வேறு தேசிய இனங்களின் கொத்தளமாக மாற்றப்பட்டது...*

*தேசிய ஒற்றுமை என்பதின் முழுமையான பொருளைச் சோவியத் அரசு எடுத்துக் காட்டியது.*

www.tamilarangam.net



ஒன்றுபடுத்தப்பட்ட மனித சக்தியானது எத்தகைய மாபெரும் அற்புதங்களை நிகழ்ந்தவல்லது என்பதை பாரறியப் பறை சாற்றியது, சோவியத் அரசு.

மனித குலம் அனைத்திற்கும் ஒரு ஜீவனுள்ள உதாரணமாகத் திகழ்ந்த இந்த அம்சங்கள், உலக அரசியலிலும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின.

முதலாளித்துவ நாடுகள் தொழில் நெருக்கடியினால் அவதியுறுகிறபோது, சோவியத் சோஷலிஸ அரசு எங்ஙனம் வெற்றிகளைச் சாதிக்க முடிகிறது?

இந்தக் கேள்விக் குறிகள் காங்கிரஸ் இயக்கத்திலும் கிளைத்து எழுந்தன.

மகத்தான அக்டோபர் புரட்சியால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் சோஷலிசத்தின்பால் கவரப்பட்டனர். இதனுடைய ஒரு கட்டத்தில்தான், இத்தகைய கருத்-தோட்டங்களுக்கு ஆளான இளைஞர்களில் ஒரு பகுதியினர் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி என்ற அமைப்பை உருவாக்கினர்.

ஜெயப்பிரகாஷ் நாராயண், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், அசோக் மேத்தா, ராம்மனோகர் லோகியா ஆகியோர் இதில் முன்னின்றனர்.

மற்றொரு பகுதியினர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். இந்நேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது பழைய நிலைபாடுகளை மாற்றியமைத்துப் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது.

'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும்! பிரிட்டிஷ் ஆட்சியாளருக் கெதிராக விரிவான, பரந்து பட்ட ஒரு வலுமிக்க மக்கள் பகுதியைத் திரட்ட வேண்டும்' எனும் வகையில் செயல்பட்டனர்.

www.tamilarangam.net



ஐரோப்பாவில், பாசிசத்திற்கெதிராகக் கம்யூனிஸ்டுகள் ஐக்கிய முன்னணியை அமைத்துப் போராடுவதைப் போன்று..

இந்திய அரசியலிலும், இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஐக்கிய முன்னணித் தந்திரத்தைக் கடைப்பிடித்தனர்.

இவர்கள், சமஸ்தான மக்களின் போராட்டங்களிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

வெகு ஜன அமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டன. அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஒன்றுபடுத்தப்பட்டுப் பலப்படுத்தப்பட்டது. விவசாயிகள் சங்கம், மாதர் சங்கம், மாணவர் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய மக்கள் நாடக மன்றம் என்று பலவிதமான அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

இவ்வமைப்புகள்தாம் ஒரு வெகுஜன பேரெழுச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தன. பல இடங்களில் போராட்டத்தீ மூண்டது.

இவற்றையெல்லாம் வழி நடத்திச் செல்கிற வகையில், ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் கட்சியிலிருந்த சோஷலிஸ்டுகள், இடது சாரி மனோபாவம் கொண்டவர்கள், சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் இயங்கிய பார்வர்டு பிளாக், சகஜானந்த சரஸ்வதி தலைமையில் இயங்கிய விவசாயச் சங்கத்தினர் - இவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழு (Left Consolidation Committee) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

சுபாஷ் சந்திரபோஸ், பி.சி. ஜோஷி, ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ் ஆகியோர் இவற்றுக்குத் தலைமை தாங்கினர்.

இந்த இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழுதான், கார்ல் மார்க்ஸ் எழுதிய 'முதல் இந்தியச் சுதந்திரப்போர்', லெனின் எழுதிய 'என்ன செய்யவேண்டும்?' (What is to be done),

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெனினது வாழ்க்கையை விவரிக்கும் 'லெனின் ஒரு மனிதன்' நூல்களை வெளியிட்டது.

இக்கமிட்டி சமஸ்தானத்து மக்கள் போராட்டங்களிலும் தீவிரமாகக் கவனம் செலுத்த ஆரம்பித்தது.

அதே சமயம், காங்கிரஸ் கட்சிக்குள்ளும் கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. காங்கிரஸ் தலைமை கடுமையாக விமர்சிக்கப்பட்டது...

'காந்தீயம் தோல்வியடையும்; ராமராஜ்யம் என்பதெல்லாம் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு இயைந்ததாக இல்லை; தனிநபர் சத்தியாக்கிரகம் போன்ற போராட்ட முறைகளெல்லாம் காலாவதியானவை...உசிதமானதல்ல...' எனும் கருத்துக்கள் காங்கிரஸ் கட்சிக்குள் பரவலாக எழுந்தன.

காங்கிரஸ் வரலாற்றிலேயே இதுவரை சந்தித்திராத எதிர்ப்பினைக் காந்தியடிகள் சந்திக்க நேரிட்டது. இதன் உச்சக்கட்டம்தான் காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு ஏற்பட்ட போட்டி.

திரிபுரா எனுமிடத்தில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய மாநாடு நடத்தப்பட்டது. காந்தியின் வேட்பாளராக, காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் பட்டாபி சீதாராமய்யா நிறுத்தப்பட்டார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த கம்யூனிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரி அணியினர், சுபாஷ் சந்திரபோஸைத் தங்களது வேட்பாளராக அறிவித்தனர்.

போஸ் வெற்றி பெறார். ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்தோட்டங்களைப் புரிந்து கொள்ள மறுத்த காந்தியடிகள், 'பட்டாபி சீதாராமய்யாவின் தோல்வி எனது தோல்வி' என்று சொன்னார்.

ராஜாஜி, போஸை, 'ஒரு ஓட்டைப் படகு' என்று வர்ணித்தார்.

www.tamilarangam.net



இவற்றையெல்லாம் இங்கு ஏன் குறிப்பிடுகிறே-னென்றால், 'மக்களிடையே ஏற்பட்ட எழுச்சி, காங்கிரஸ் கட்சிக்குள் எவ்வாறு பிரதிபலித்தது. அவற்றைக் காந்தி போன்ற தலைவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டார்கள்' என்பதைக் காட்டத்தான்.

இச் சூழலில்தான் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. உலகத்தை மீண்டும் பங்கிடுவதற்காக ஏகாதிபத்திய நாடுகள் யுத்தத்தைத் துவக்கின.

ஒரு பக்கம் பிரிட்டனும், பிரான்ஸும், மறுபக்கம் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி முதலிய நாடுகள் யுத்தத்தில் குதித்தன.

அச்சமயத்தில்-

'இது நமது யுத்தமுமல்ல...நியாயமான யுத்தமுமல்ல; பிரிட்டிஷாரின் யுத்த நடவடிக்கைகளுக்கு இந்திய மக்கள் ஒரு போதும் ஒத்துழைக்கக்கூடாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இப்போரை உள்நாட்டுப் போராக மாற்ற வேண்டும்! அதன் மூலம் அதிகாரத்தைப் பறிக்க வேண்டும்!' என்று கம்யூனிஸ்டுகள் மக்களுக்கு அறைகூவல் விடுத்தனர்.

இதற்கு மக்கள் மத்தியில் பெரும்வரவேற்பு இருந்தது.

யுத்தத்தை எதிர்த்து, பிரிட்டிஷாரின் யுத்த முஸ்தீபுகளை எதிர்த்துப் போராட்டங்கள் வெடித்தன. பம்பாயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து தெருவில் இறங்கினர். மாணவர்கள் பலர் பள்ளிகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் குதித்தனர். நாடெங்கும் யுத்த எதிர்ப்புக் கோஷம் எதிரொலித்தது.

முதலில் காந்தியடிகள் இந்த யுத்த எதிர்ப்புக்கு உடன் படவில்லை. அதுமட்டுமல்ல, "வெஸ்ட் மின்ஸ்டர் அபீ* வீழ்ந்தால் உலகம் எப்படி வாழ முடியும்? இந்தியாதான்

* West Minster Abbey-பிரிட்டனிலுள்ள ஆங்கில அரசர்கள், பிரபுக்களின் கல்லறை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படி வாழ முடியும்? பிரிட்டன் தோல்வியுறுவதைக் காண என் மனம் சகியாது...எனது மனச்சாட்சி உறுத்துகிறது. யுத்த எதிர்ப்புக்கு நான் உடன்படமாட்டேன்!" என்று சொன்னார்.

அதுமட்டுமல்ல...

காங்கிரஸ் தலைவர்கள், பிரிட்டனின் யுத்தத்திற்கு ஒத்துழைக்க முன் வந்தனர். சில கோரிக்கைகளையும் பிரிட்டிஷாரிடம் முன் வைத்தனர்.

"முற்றிலும் இந்தியர்களைக் கொண்ட, சுய அந்தஸ்துள்ள ஒரு பொறுப்பு அரசாங்கம் (Responsible Government) அமைக்கப்படவேண்டும்! இந்த அரசாங்கம் பிரிட்டனின் யுத்த நடவடிக்கைகளுக்குஒத்துழைப்பு நல்கும்" என்று தெரிவித்தனர்.

ஆனால் பிரிட்டன் எந்தக் கோரிக்கைகளையும் ஏற்க முன் வரவில்லை.

மாறாக, 'இந்திய ராணுவம், இந்தியாவின் செல்வம் அனைத்துமே எங்களது யுத்த நடவடிக்கைகளுக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும். இவற்றிக்கு மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகள், எதுவும் குறுக்கீடாக இருக்கக்கூடாது!" என்று அறிவித்தது.

இதனால் காங்கிரஸ் தலைமைக்கு ஆசாபங்கம் ஏற்பட்டது. பலத்த ஏமாற்றத்தை ஆளித்தது. ஆனால் மறுபுறத்தில் மக்களிடையே கம்யூனிஸ்டுகளின் யுத்த எதிர்ப்பு இயக்கத்திற்குச் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டு வந்தது.

எங்கே இது ஒரு வெகுஜன இயக்கமாக மாறிவிடுமோ என்ற அச்சம் காந்தியடிகளுக்கும் காங்கிரஸ் தலைமைக்கும் ஏற்பட்டதால், பின்னர் அவர்களும் யுத்த எதிர்ப்புக் கோஷம் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

காங்கிரஸ் கட்சியின் யுத்த எதிர்ப்பு, ஒரு வெகுஜன இயக்கமாக மாறிவிடக்கூடாது என்பதில் காந்தியடிகள் மிகவும் கவனமாக இருந்தார்!

www.tamilarangam.net



அதனால் தனி நபர் சத்தியாக்கிரகம் என்ற பெயரில் தான் தேர்ந்தெடுக்கிற நபர்களே யுத்த எதிர்ப்பில் ஈடுபட வேண்டும் என்று அறிவித்தார்.

இவ்வாறு வெகுஜன எழுச்சியைத் திசை திருப்பி, பலஹீனப்படுத்தித் தனி நபர் சத்தியாக்கிரகம் எனும் எல்லைக்குள் கட்டுபடுத்தினார்.

இதில் காந்தியடிகள், ஓரளவிற்கு வெற்றியும் கண்டார்.

காந்திஜியின் தன்னிச்சையான போக்கைக் கண்டிக்க எந்தவொரு காங்கிரஸ்காரரும் எந்தவொரு அமைப்பும் முன் வராத நிலைமை இருந்தபோதுதான் இடதுசாரி ஒருங்கிணைப்புக்குழு, காந்திஜியின் தலைமைக்கு ஒரு மிகப் பெரிய சவாலாய் விளங்கியது.

யுத்தம் தொடங்குவதற்கு முன்னரே, இது ஒரு மிகப் பெரிய வெகுஜன இயக்கமாக, ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியை உருவாக்கியது. காந்தியடிகளின் முறையற்ற போக்கினால் தேங்கிக்கிடந்த இந்திய அரசியல் இயக்கத்தில் ஒரு புதிய அலையை உண்டு பண்ணியது,

புதிய அசைவுகளை, புதிய நம்பிக்கைகளை, புதிய எதிர்பார்ப்புகளை இந்திய மக்களிடத்தில் ஏற்படுத்தியது.

யுத்த எதிர்ப்பு இயக்கத்தில் காந்தியடிகளை வலுக்கட்டாயமாக இறக்கியதற்கு இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழுவிற்கு இருந்த மக்கள் செல்வாக்கும் ஒரு முக்கிய காரணம்.

ஆனால் இந்த இடதுசாரி ஒருங்கிணைப்புக்குழு தொடர்ந்து நீடிக்கவில்லை.

யுத்தத்தின் ஒரு கட்டத்தில் போஸினுடைய போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

'எதிரியின் எதிரி நண்பன்' எனும் வகையிலே, பிரிட்டிஷாரை எதிர்க்க ஜப்பானியர்களின் உதவியை நாடுவது என்ற தவறான முடிவுக்கு அவர் போனார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்த பலரும் இதை ஏற்கவில்லை. கடுமையான கருத்து வேறுபாடுகள், குழப்பங்கள் மேலெழஆரம்பித்தன. இறுதியில் ஜெயப்பிரகாஷ்நாராயண் காந்தியடிகள் வழியே சரி என்று அவர் பின் சென்றார்.

கம்யூனிஸ்டுகள், போஸின் தவறான போக்கினைக் கண்டித்தனர். இருந்தும் போஸ், தனது நிலையிலேயே பிடிவாதமாக இருந்தார். காந்தியடிகளின் தனிநபர் சத்தியாக்கிரகமே சிறந்த போர் முறை என்று ஜெயப்ரகாஷ் நாராயண் அவர் வழியே சென்றுவிட்டார்.

இந்திய அரசியலில் பிரகாசமான சக்தியாக ஒளிவீசிக் கொண்டிருந்த இடதுசாரி ஒருங்கிணைப்புக்குழு கடைசியில் உருக்குலைந்து போனது. இவ்வமைப்பில் இருந்த பலர் தங்களைக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.

எனினும் சமஸ்தான மக்களின் போராட்டங்களில் எவ்விதப் பின்னடைவும் ஏற்படவில்லை, மாறாக, அதுவும் இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், அது மேலும், மேலும் வலுக்கொண்ட இயக்கமாகப் பற்றிப் பரவியது.

பாசிஸ்ட் ஜெர்மனியை வீழ்த்தி, பெர்லினைக் கைப்பற்றி, சோவியத் செஞ்சேனையினர் பெற்ற மகத்தான வெற்றியானது காலனியாதிக்கத்தின் அஸ்திவாரங்களை யெல்லாம் ஆட்டம் காணச் செய்தது.

இந்தியாவிலும் இதன் பிரதிபலிப்புகள் வலுவாக எழுந்தன.

சோவியத் வெற்றியும், பாசிஸ்ட் ஜெர்மனியின் வீழ்ச்சியும் காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த மக்களுக்கெல்லாம் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்தன.

www.tamilarangam.net



இது சமஸ்தான மக்களிடம் பெரும் கொந்தளிப்பை உண்டு பண்ணியது.

1942க்குப் பிறகு காங்கிரஸ் தலைமை எந்த ஒரு வெகுஜன இயக்கத்தையும் நடத்தத் தயாராயில்லை. இருந்த போதிலும் மக்களிடையே பல போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின.

கம்யூனிஸ்டுகளின் நேரடித் தலைமையிலே பல சமஸ்தானங்களில் மக்கள் கொதித்துக் கிளம்பினர்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், 'சுய ஆட்சி வேண்டும்! பொறுப்பு ஆட்சி வேண்டும்! ஜனநாயக உரிமைகள் அளிக்கப்படவேண்டும்!' என்று கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். தோழர்கள்கிருஷ்ணப் பிள்ளை, ஏ.கே. கோபாலன், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஆகியோர் இப்போராட்டத்தை நடத்தியவர்களில் முக்கியமானோர்.

காஷ்மீர் மன்னனுக்கெதிராக, மக்கள் கிளர்ந்தெழுந்-தார்கள். ஷேக்-அப்துல்லா, தோழர் ஹர்கிஷன்சிங் சுர்ஜித் ஆகியோர் அந்தப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டுத் தலைமையேற்றனர்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் நடைபெற்ற போராட்டத்தின் ஒரு கட்டத்தில்தான்...ஜவஹர்லால் நேரு காஷ்மீர் மக்களின் எழுச்சியில் ஆகர்ஷிக்கப்பட்டு, நேரடியாக அங்கு சென்று தடையை மீறிக் கைதானார்.

தெலுங்கானாவில் இதன் தாக்கம் மிகவும் பலமாக இருந்தது. கம்யூனிஸ்டுகளின் நேரடித் தலைமையின் கீழ் ஆந்திர மகாசபாவும் விவசாயிகள் சங்கமும் நிஜாமிற்-கெதிராகப் போர்க்குணமிக்க மக்கள் எழுச்சியை உண்டு பண்ணின.

இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிட்டேனென்றால், தெலுங்கானா மக்கள், எத்தகைய பெரிய தடைக்கற்களை யெல்லாம் மீறி, ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைத் திரட்டினர் என்பதைச் சுட்டிச் காட்டத்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிட்டிஷார் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்ட போதும் சரி, காங்கிரஸ் தலைமை அவர்களது போராட்டத்தை அங்கீகரிக்காத நிலையைக் கடைப்பிடித்தபோதும் சரி, அவர்களது போராட்டத்திற்கு ஆதரவளித்த தேசியத் தலைமையில் (இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழுவிலே) குழப்பமும் பிளவும் ஏற்பட்ட போதும் சரி...

இதன் எந்த அம்சங்களாலும் தெலுங்கானா மக்கள் சற்றும் தளரவில்லை. பின் வாங்கவுமில்லை. மாறாக... படிப்படியான ஒரு வளர்ச்சியை நோக்கித்தான் அவர்கள் நடை பயின்றார்கள்.

அது மட்டுமல்ல... அவர்களது பிரதேசமானது பல்வேறு சிக்கல்களை இயல்பாகவே தன்னகத்தே கொண்டிருந்தது.

ஒன்றுக்கு மேற்பட்ட மதங்களைப் பின்பற்றுகிறவர்கள், பல்வேறு மொழிகளைப் பேசுகிறவர்கள் அச் சமஸ்தானத்தில் வசித்து வந்தனர்.

இந்தக் கலாச்சார சிக்கல்களையெல்லாம் மீறி, அவர்கள் எவ்வாறு இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார்கள் என்பதை இனிக் காண்போம்.

www.tamilarangam.net

## 3. இடதுசாரி முன்னேற்றம்

மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்படாத காலம் அது.

இதன் அவசியம் பற்றி உணராத நிலைமைதான் நிலவியது அப்போது.

அன்று, தமிழ்நாட்டோடு, தெலுங்கு மொழி பேசும் ஆந்திராவின் ஒரு பகுதியும், மலையாள மொழி வழங்கி வரும் மலபார் பகுதியும், கன்னட மொழி புழக்கத்திலுள்ள தெற்குக் கர்நாடக மாவட்டங்களும் ஒன்றாக இணைந்திருந்தன.

இதுதான் சென்னை ராஜதானி (Madras Presidency) என்றழைக்கப்பட்டது.

இது போன்றுதான் நிஜாமின் ஹைதராபாத் சமஸ்தானமும். கிட்டத்தட்ட 83 ஆயிரம் சதுர மைல் பரப்பு கொண்ட இச்சமஸ்தானத்தில், முக்கியமாக மூன்று மொழிகளைப் பேசுகிற மக்கள் வசித்து வந்தனர்.

தலைநகரான ஹைதராபாத் மற்றும் அதைச் சுற்றியுள்ள எட்டு மாவட்டங்கள், இவற்றில் தெலுங்கு பேசுகிற மக்களே வசித்து வந்தனர்.

இதுதான் 'தெலுங்கானா' என்றழைக்கப்பட்டது.

அது போன்று மராத்தி மொழி பேசப்படும் ஐந்து மாவட்டங்கள் கொண்ட பகுதி 'மராத்வாடா' என்றழைக்கப்பட்டது.

மேலும் கன்னடமொழி பேசுகிற மூன்று மாவட்டங்களும் இதனோடு இணைந்திருந்தன.

மொத்தப் பரப்பளவில் 50 சதவீதம் தெலுங்கானா பகுதி.

www.tamilarangam.net



28 சதவீதம் மராத்வாடா பகுதி. 22 சதவீதம் கன்னடப் பகுதி. சில் பகுதிகளில் மட்டும் பிறமொழி பேசுபவர்கள் வசித்து வந்தனர்.

மக்கள் தொகைக் கணக்கின்படித் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 50 சதவீதம்; மராத்தி மொழி பேசுபவர்கள் 11 சதவீதம்; உருது பேசுகிறவர்கள் 12 சதவீதம். இவ்வாறு பல்வேறு மொழி பேசக்கூடியவர்கள், பல்வேறு மாநிலங்களோடு இயற்கையாகவே இணைய வேண்டிய நிலப்பகுதிகளில் உள்ளவர்கள், இவர்களையெல்லாம் வலுக்கட்டாயமாக இணைத்து வைத்திருக்கிற ஒரு செயற்கையான அமைப்பாகத்தான் ஹைதராபாத் சமஸ்தானம் இருந்தது.

'வலுக்கட்டாயமாக இணைத்து வைக்கப் பட்டிருந்தார்கள்' என்று ஏன் நான் குறிப்பிடுகிறேனென்றால்,

நிஜாமின் தாய்மொழியான உருது மொழியைத் தவிர எந்த மொழிக்கும் அங்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

உருது மொழிதான் ஆட்சிமொழி. உருதுமொழியின் வளர்ச்சிக்கு மட்டும்தான் அரசாங்கம் ஊக்கமளித்து வந்தது.

அது தவிர ஆரம்பப்பள்ளியிலிருந்து கலாசாலைக் கல்வி வரை உருதுதான் பயிற்று மொழி.

தங்கள் தாய்மொழியிலே கல்வி கற்க வேண்டும்: தங்களது கலாச்சாரமும் போற்றிப் பாதுகாக்கப்பட-வேண்டும் என விழைகின்ற பெருவாரியான மக்களின் இதயதாகம் நெடுநாட்களாகவே ஒடுக்கப்பட்டு வந்தது.

இந்தக் கலாச்சார ஒடுக்குமுறைதான் ஆரம்ப காலத்தில் நிஜாமின் ஆட்சியில் அதிருப்தி கொண்ட மக்கள் அரசுக்கு எதிரான திசையில் செல்லும் நிலைமையை உருவாக்கியது.

நிஜாம் மன்னன் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவன். அதனால் அரசாங்க உயர்பதவிகளில் அம்மதத்தைச்

www.tamilarangam.net



சார்ந்தவர்களே இருந்தனர். சகல துறைகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் பெரும்பான்மையினராக இருந்ததால் இந்தப் போக்குகள் அவர்களிடையே கசப்பை உண்டு பண்ணியது.

'நாங்களே ஆளப்பிறந்தவர்கள். ஆளுகிற உரிமை எங்களுக்கு மட்டும் தான் உண்டு' என்று நிஜாமும் முல்லாக்களும் மமதையோடு பிரச்சாரம் செய்து வந்தனர்.

இக்கருத்தை மக்கள் ஏற்கச் செய்வதற்குப் பல வழிகளில் முயன்றனர்.

இவையெல்லாம் பெரும்பான்மையினரான இந்துக்களிடத்தில் கசப்புணர்வையும் வெறுப்பையும் வளர்த்தன.

நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள் வளர்ந்து வருகிற வர்த்தகர்கள் மற்றும் தொழில் துறையினர் இவர்களிடையேயும் கசப்புணர்வு வலுவாக மேலோங்கியது.

நிஜாம் மன்னனின் பிரபுத்துவக் கலாச்சார ஒடுக்கு முறை மூஸ்லீம் மன்னனின் ஒடுக்கு முறையாக மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டது.

இந்தச் சமயத்தில்தான்-

'முஸ்லீம் ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராக, இந்து மக்களின் பாதுகாவலான' ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைப் பிரகடனப்படுத்திக்கொண்டனர்.

நிஜாம் மன்னனுக்கெதிராக, ஒரு மத அடிப்படையிலான போராட்டத்தையும் அவர்கள் துவக்கினர்.

நிஜாமை எதிர்த்த முதல் மக்கள் இயக்கமாக அது திகழ்ந்தது. ஹைதராபாத் சமஸ்தானத்தில் நிகழ்ந்த முதல் எதிர்ப்பியக்கம் எனும் வகையில் குறிப்பிடத்தகுந்த முக்கியத்துவத்தை இது பெற்றிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனினும் இவ்வியக்கங்கள் மோசமான பின் விளைவு களையும் உருவாக்கின.

ஆரிய சமாஜத்தினரின் பல போராட்டங்களைத் தொடர்ந்து இரு பகுதி மக்களிடையேயும் மத அடிப்படையான மோதல்கள் ஏற்பட்டன.

இம்மோதல்களை மேலும் கூர்மைப்படுத்தி, மக்களை மத ரீதியாகப் பிரிப்பதற்கே ஆரிய சமாஜத்தினர் இயக்கங்கள் பயன்பட்டன.

ஆனால் அதே நேரத்தில், சமஸ்தானத்தில் உள்ள இந்து நிலப்பிரபுக்கள், இந்து ஜமீன்தார்கள் ஆகிய இவர்களுக்கும் நிஜாம் மன்னனுக்கும் எந்தவிதமான மோதல்களும் ஏற்படவில்லை.

அரச மண்டபத்தில் அவர்கள் ஒன்றாக விருந்துண்டனர். உல்லாசங்களில் ஈடுபட்டனர்.

நிஜாமும் இந்து நிலப்பிரபுக்களும் கை கோர்த்து நின்றதற்கு அடிப்படையான காரணம் உண்டு.

மதத்தால் மட்டும் அவர்களது உறவு நிச்சயிக்கப் படவில்லை. ஹைதராபாத் சமஸ்தானத்தின் சமூகப்-பொருளாதார வாழ்வின் அடிப்படை அம்சங்களே அவர்களைப் பிணைத்து வைத்திருந்தன.

இவற்றை மக்கள் வெகு விரைவில் புரிந்துகொண்டனர். போகப்போக நிஜாம் மன்னனுக்கெதிரான போராட்டத்தின் தன்மை படிப்படியாக மாறுதலடைந்து ஒரு முழுமையான உருவத்தைப் பெற்றது.

ஹைதராபாத் சமஸ்தானத்தின் சமூக, பொருளாதார வாழ்வின் அடிப்படை அம்சங்கள் எது என்பதை இங்கு அவசியம் சொல்லியாக வேண்டும்.

ஒரு வரைமுறையற்ற பிரபுத்துவச் சுரண்டல் ஹைதராபாத் சமஸ்தானத்தில் தலை விரித்தாடிக் கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தப் பிரபுத்துவச் சுரண்டல் முறைதான் அச் சமஸ்தானத்தின் சமூகப் பொருளாதார வாழ்வின் தண்டு வடமாக விளங்கியது.

அம் மாநிலத்தின் மொத்த விவசாயநிலம் ஏறக்குறைய ஐந்து கோடியே முப்பது லட்சம் ஏக்கர்.

இதில் சுமார் மூன்று கோடி ஏக்கர் நிலம் அரசாங்க நில வருவாய்த் துறையினரின் கீழ் இருந்தது.

இந் நிலங்களுக்கு 'திவானி' அல்லது 'கால்சா' பகுதி என்று பெயர்.

சுமார் ஒன்றரைக் கோடி ஏக்கர் நிலம், ஜாகீர்தாரி முறையின் கீழ் இருந்தது!

அதாவது ஜமீன்தார்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

இது தவிர சுமார் 50 லட்சம் ஏக்கர் நிலம் நிஜாம் மன்னனின் சொந்தச் சொத்தாக இருந்தது.

இப்படி நிஜாமின் நேரடிச் சொத்தாக இருந்த நிலங்களுக்குச் 'சர்ப்காஸ்' (Surfkhas) பகுதி என்று பெயர்.

சொந்தச் சொத்தான இந் நிலங்களிலிருந்து மட்டும் வருடமொன்றுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு (அப்போதுள்ள நாணய மதிப்பில்) மேல் நிஜாம் மன்னனுக்குக் கிடைத்து வந்தது.

கட்டாய 'கொள்ளை வசூல்' மூலம் இந் நிலங்களைப் பயிரிட்ட விவசாய மக்களிடமிருந்து இது பெறப்பட்டது.

நிஜாமின் குடும்பச் செலவிற்காகவும் அவனுடைய பரிவாரங்களைப் பராமரிப்பதற்காகவும் இப்பணத்திலிருந்துதான் எடுத்துச் செலவழிக்கப்பட்டது.

ஆனால் இதையளித்த விவசாய மக்களுக்காக அவர்களின் சேமநலத்திற்காக (Welfare Measures) இந்தப்

www.tamilarangam.net



பணத்திலிருந்து ஒரு தம்பிடி கூட நிஜாம் மன்னன் செலவிட்டதில்லை. செலவழிக்கத் தயாராகவும் இல்லை. இப்படிப் பெறப்படும் இரண்டு கோடி ரூபாய் தவிர ஆங்கிலேய அரசாங்கம் அளித்த மன்னர் மான்யத்தையும் நிஜாம் பெற்று வந்தான்.

இவ்வாறு மான்யமாக மட்டும் பெற்ற தொகை வருடமொன்றுக்கு 70 லட்சம் ரூபாய்.

இந்த 'சர்ப்காஸ்' பகுதியிலுள்ள விவசாயிகள், அதாவது நிஜாமின் சொந்த நிலத்தில் இருந்த விவசாயிகள் மன்னனின் கீழ்க் கொத்தடிமைகளாகவோ அல்லது பண்ணையடிமை-களாகவோதான் இருந்தனர்.

'திவானி' பகுதி (நிலவருவாய்த் துறையின் கீழ் உள்ள பகுதியிலிருந்த) விவசாயிகள் பெற்றிருந்த ஒரு சில உரிமைகள்கூட இவர்களுக்குக் கிட்டவில்லை.

ஜாகீர் பகுதிகளைப் பொறுத்தவரையில் அங்கே பல்வேறு விதமான நிலப்பிரபுக்கள் இருந்தனர்.

பைகாக்கள், சமஸ்தானங்கள், ஜாகீர்தார்கள், இஜர்தார்கள், பஞ்சர்தார்கள், மக்டேதார்கள், ஜனாம்தார்கள் அல்லது அக்ரஹாரங்கள் ஆகியோர் இவற்றில் அடங்குவர்.

இவர்கள் விவசாய மக்கள் மீது வரிவிதித்துச் சொந்தமாக வருவாய்த் துறை அதிகாரிகளை நியமித்து, அவர்களின் மூலம் கட்டாய வசூலைச் செய்து வந்தனர்.

இவர்களின் ஒரு சிலர் மட்டுமே தாங்கள் வசூல் செய்த தொகையில் ஒரு சிறு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்தனர்.

பலருக்கு நிஜாம் மன்னன் சலுகையளித்திருந்தான். அவர்கள் எதையும் செலுத்துவதில்லை.

திவானி பகுதியில் விதிக்கப்பட்டிருந்த நிலவரி,

www.tamilarangam.net



பாசனவரி இவற்றைப் போலப் பத்து மடங்குக்கும் அதிகமாக ஜாகீர்ப் பகுதிகளில் வரி விதிக்கப்பட்டிருந்தது.

இதன்படிப் பார்த்தால் ஒரு விவசாயி, ஒரு ஏக்கருக்கு 150 ரூபாய் அல்லது 30 மணங்கு நெல் செலுத்த வேண்டியிருக்கும்.

பைகாக்கள், சமஸ்தானங்கள் போன்ற பெரும் நிலப்பிரபுக்கள் தங்களுக்கென்று தனியே ஒரு நிர்வாக அமைப்பையே உருவாக்கிக் கொண்டனர்.

-நிலவருவாய்த்துறை, சிவில்துறை, குற்றவியல் துறை, நீதித்துறை என்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இந்த அமைப்பு இயங்கி வந்தது.

-இவர்களுக்கென்று தனிப் போலீஸ் படையும் உண்டு.

சொல்லப் போனால் நிஜாம் மன்னனின் ஆளுகைக் குட்பட்ட குறுநில மன்னர்களைப் போலத்தான் இந் நிலப் பிரபுக்கள் செயல்பட்டனர்.

இஷ்டம் போல் வரி விதிக்கலாம். இதில் நிஜாமின் குறுக்கீடு எதுவும் கிடையாது.

இயற்கையின் பாதிப்புகளால் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகளால் வரி செலுத்த முடியாதபோது அவர்களின் நிலங்களைக் கைப்பற்றிக் கொள்வார்கள்.

சிறிய தொகையைக் கடன் கொடுத்து வெற்றுப் பேப்பரில் கையெழுத்து வாங்குவார்கள். பிறகு அவர்களுடைய நிலங்களையெல்லாம் விவசாயிக்குத் தெரியாமல் தன் பெயரில் பதிவு செய்து கொள்வார்கள்.

பஞ்ச காலத்தில் தானியங்களை அதிக வட்டிக்குக் கடன் என்ற பெயரில் தருவார்கள். பிறகு அதைத் திருப்பித் தரவில்லையென்ற காரணத்தைக் காட்டி நிலங்களை அபகரிப்பார்கள்.

இப்படி ஈவிரக்கமற்ற மோசடிகளை, நிலப்பிரபுக்கள் மிகவும் சர்வ சாதாரணமாய்ச் செய்து வந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதில் இந்து என்றோ... முஸ்லீம் என்றோ பாகுபாடு கிடையாது.

அனைத்து நிலப்பிரபுக்களும் ஒன்றுதான்.

இதுபோன்று நிலப்பிரபுக்கள் அபகரித்த நிலங்கள் எவ்வளவு தெரியுமா?

அப்போது எடுக்கப்பட்ட ஒரு கணக்கு-

விஷ்ணூர் தேஷ்முக்-40 ஆயிரம் ஏக்கர் நிலம்.

சூரியா பேட்டை தேஷ்முக்-20 ஆயிரம் ஏக்கர் நிலம்.

பாபாசாகிப் பேட்டை தேஷ்முக்-1 லட்சம் ஏக்கர் நிலம்.

கல்லூரு தேஷ்முக்-1 லட்சம் ஏக்கர் நிலம்.

ஜன்னரெட்டி, பிரதாப்ரெட்டி-11/2 லட்சம் ஏக்கர் நிலம்.

குறிப்பாக ஹைதராபாத்தைச் சுற்றியும், தெலுங்கானா பிராந்தியத்திலும் நிலக்குவிப்பு என்பது மிகவும் பூதாகாரமாக இருந்தது.

நளகொண்டா, மகபூப் நகர், வாரங்கல்; இம்மூன்று மாவட்டங்களில் மட்டும், மொத்த சாகுபடி நிலத்தில் 60 முதல் 70 சதவீதம் வரை, 550 பெரும் நிலப்பிரபுக்கள் கையிலிருந்தது.

விவசாயிகள் எந்த அளவுக்குக் கொள்ளையடிக்கப்பட்டார்கள் என்பதை ஒரு சிறிய உதாரணம் மூலம் இங்கு விளக்க முடியும்.

இந் நிலப்பிரபுக்களில் 110 நபர்கள் மட்டும் வரி என்ற பெயரில் வருடமொன்றுக்கு 10 கோடி ரூபாய் விவசாயிகளிடமிருந்து பெற்றனர்.

சட்டபூர்வமாக வசூலிக்கப்பட்ட தொகை மட்டுமே இவ்வளவு. சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்ட தொகை இதைப்போல் மூன்று மடங்கு இருக்கும்.

www.tamilarangam.net



தெலுங்கானாவில் மற்றொரு கொடூரமான சூழலும் நிலவி வந்தது.

'கட்டாய இலவச உழைப்பு' என்பதுதான் அது. இக் கொடுமைக்கு உள்ளாகாத கிராமப்புற ஏழைக் குடும்பங்கள் ஒன்றுகூட அங்கு கிடையாது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பமும் வீட்டிற்கு ஒருவரை இலவச உழைப்பிற்காக அனுப்ப வேண்டும்.

சிறிய குக்கிராமங்களில் ஜாதி வித்தியாசமின்றி அனைவரும் வீட்டுக்கு ஒருவரை இலவச உழைப்பிற்காக அனுப்புதல் வேண்டும்,

இப்படிச் செல்லுபவர்கள் எப்படியெல்லாம் வேலை வாங்கப்பட்டனர் தெரியுமா?

இவர்கள் தான்-

பட்வாரி, தேஷ்முக் போன்ற கிராம அதிகாரிகளின் வீட்டு வேலைகளைச் செய்யவேண்டும். இது தவிர காடுகளிலிருந்து விறகு சேகரித்து வரவேண்டும். தாலுகா அலுவலகங்களுக்குத் தபால்களைக் கொண்டு சேர்ப்பது; கிராமச் சாவடிகளைக் கண்காணிப்பது; இவையும் இவர்களின் பணிதான். தோல் பதனிடுவது, செருப்புத் தைப்பது, கவலை மாடுகளுக்கு வார்கள் மற்றும் 'தொண்டான்' தைப்பது, துணிகளை வெளுத்துத் தருவது இது போன்ற வேலைகளெல்லாம் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செய்து தர வேண்டும்.

இது தவிர,

நிலப்பிரபுக்கள் தங்கள் குடும்பத்தோடு உறவினர்களைக் காணச் செல்லும்போதும், உற்சவங்களுக்குச் செல்லும் போதும், பல்லக்குகளில்தான் செல்லுவார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்தான் பல்லக்குகளைச் சுமக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலப்பிரபுக்கள் மாட்டுவண்டியில் சென்றால் வண்டி செல்லும் வேகத்திற்கு இவர்கள் முன்னாலும் பின்னாலும் ஓடி வரவேண்டும்.

குதிரைச் சவாரி செய்தால் சேணத்தைப் பிடித்துக் கொண்டு உடன் ஓடி வரவேண்டும்.

முடி திருத்தும் தொழிலாளிகள், தேஷ்முக்குகள் குடும்பத்திற்கு இலவச சேவை செய்ய வேண்டும்.

சிரமபரிகாரம் செய்வது, கை, கால் பிடித்துவிடுவது 'மஸாஜ்' செய்வது எல்லாம் இவர்களின் வேலைதான்.

இவையனைத்தையுமே எந்தவிதக் கூலியும் பெறாமல் இலவசமாகவே இவர்கள் செய்து வந்தனர்.

இதைவிட, நெஞ்சைக் கிழிக்கிற மற்றொரு கொடுமையும் அங்கு நிலவியது.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் நிலப்பிரபுக்களின் வீட்டில் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள்-

வீட்டில் இடுகிற சகல வேலைகளையும் செய்வது தவிர நிலப்பிரபுக்களின் காமவிகாரங்களுக்கு மறுமொழி பேசாது பணியுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். சில நிலப்பிரபுக்கள் இவர்களை வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்வதும் உண்டு.

தங்கள் மகளுக்கு மணம் செய்வித்துப் புகுந்த வீட்டிற்கு அனுப்பும்போது சீதனப் பொருள்களோடு இந்தப் பெண்களையும் சேர்த்து அனுப்பி வைப்பார்கள்.

'அடிமை முறை' என்பது ஒரு புதிய வடிவில் அங்கு நிலவி வந்தது.

இப்படி எண்ணற்ற, சகிக்க முடியாத பல தரப்பட்ட கொடுமைகளைத் தெலுங்கானா பகுதி மக்கள் அனுபவித்து வந்தனர்.

www.tamilarangam.net



ஆதரவற்ற சூழல், வறுமையின் பாதிப்பு, கட்டாய இலவச உழைப்பு, நிலவெளியேற்றம், கொடூரமான நிலப் பிரபுத்துவச் சுரண்டல் இவற்றால் நசுக்கப்பட்டுத் தரையோடு தரையாகத் தேய்க்கப்படுகிற ஒரு வாழ் நிலைதான் தெலுங்கானா மக்களுக்கு.

ஒன்று, வாய்மூடி மௌனிகளாய் இருந்து அனைத்து இழிவுகளையும் தாங்கிக்கொண்டு புழு பூச்சிகளைப்போல் வாழவேண்டும்.

அல்லது-

இந்த ஒடுக்குமுறைகளுக் கெதிராகப் போர்க் குரல் எழுப்பவேண்டும். தங்களது உரிமைகளுக்காகவும் வாழ்விற்காகவும் போராட்டக்களத்தில் இறங்கியாக வேண்டும்.

இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தெலுங்கானா மக்கள் படிப்படியாகத் தள்ளப்பட்டனர்.

நிஜாம் மன்னனுக் கெதிராகவும் அவனது பிரபுத்துவ, சர்வாதிகார ஒடுக்குமுறைக்கெதிராகவும் போர்க்குரல் எழுபபவேண்டும் என்கிற எண்ணம், மக்களிடம் மெதுவாகக் கனல் விடத் தொடங்கியது. இவ்வாறு மக்களின் குமுறல்கள் பொங்கிக் கொண்டிருக்கிற சமயத்தில்தான், இவற்றிற்கு வடிவம் கொடுக்கும் வகையில் உருவானது ஒரு மகத்தான அமைப்பு.

அதுதான் ‘ஆந்திர மகா சபை.’

இந்தியத் தேசிய காங்கிரஸ் மன்னராட்சி மாநிலங்கள் குறித்து முற்றிலும் பிற்போக்கான நிலையைக் கையாண்ட சமயம் அது.

‘சுதேசி மன்னர்களுக்கு எதிராக அம்மாநில மக்கள் போராடக் கூடாது! சுதேசி சமஸ்தானங்களில் காங்கிரஸ் கட்சியின் அமைப்புக்கள் எதுவும் கூடாது!’ என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்மானமாய்க் காங்கிரஸ் கட்சியும், காந்தியடிகளும் செயல்பட்டு வந்தனர். அப்போது...

சமஸ்தானங்களில் உள்ள தேசீய எண்ணங் கொண்டவர்கள் கூடச் சமஸ்தானங்களில் போராடாமல் வெளியே வந்து போராட்டங்களில் கலந்து கொண்டனர்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் ஆந்திர மகாசபா உருவானது.

நிஜாம் மன்னனின் ஆட்சியில்தங்கள் கருத்துக்களை வெளியிட முடியாமலும், தங்கள் மொழி, கலாச்சாரம் இவற்றின் மேன்மையழிவது குறித்துத் தங்களின் உணர்வு-களை வெளிப்படுத்த முடியாமலும் தவித்துக் கொண்டிருந்த அறிவு ஜீவிகள், தேசிய இயக்கத்தின் தாக்கத்திற்கு ஆளானார்கள். இவர்களெல்லாம் தங்களது உணர்வுகளை வெளியிட ஒரு அமைப்பு வேண்டும் என்று உணரலாயினர்.

தங்களைப் போன்று ஒருமித்த கருத்துடையவர்களை ஒன்று திரட்டினர்.

1928-இல் ஆந்திர மகா சபை எனும் அமைப்பை உருவாக்கினர்.

துவக்க காலத்தில் ஆந்திர மகா சபை நிஜாம் மன்னனுக்கெதிராக மக்களைத் திரட்டிப் போராடத் துணியவில்லை.

நிர்வாக அமைப்பில் சீர்திருத்தங்களைக் கோருகிற அமைப்பாகத்தான் அது செயல்பட்டு வந்தது.

எனினும், உரிமைகளற்ற சிறைக் கூடமாக விளங்கிய ஹைதராபாத் சமஸ்தானத்தில் மக்களின் ஜனநாயக எண்ணங்களை-மக்களது அபிலாசைகளை-எதிர்பார்ப்பு-களை-வெளிப்படுத்துகிற ஒரு களமாக 'ஆந்திர மகா சபை' திகழ்ந்தது.

1930 ஆம் ஆண்டுக்குப் பிறகு வலுப்பெற்ற தேசீய

www.tamilarangam.net



இயக்கத்தின் வீச்சுக்கு ஆளான பலர், தங்களை ஆந்திர மகா சபையில் இணைத்துக் கொண்டனர்.

போகப் போக...ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஒரு பரந்துபட்ட அமைப்பாக ஆந்திர மகாசபை உருவெடுத்தது.

காங்கிரஸ் கட்சியே இல்லாத சமஸ்தானத்தில் தேசிய இயக்கத்தின் நாடித் துடிப்புகளைப் பிரதிபலிக்கும் அமைப்பாக அது செயல்படத் துவங்கியது.

1988 ஆம் ஆண்டு...

நிஜாம் மன்னன் ஒரு தான் தோன்றித்தனமான உத்தரவைப் பிறப்பித்தான். 'வந்தே மாதரம்' பாடலைப் பாடக் கூடாதென்று தடை விதித்தான்.

இதற்கெதிராக மாணவர்கள் கொந்தளித்துக் கிளம்பினர். மாணவர்களின் போராட்டத்திற்கு மாநிலத்தி-லுள்ள அனைத்து ஜனநாயக சக்திகளும் ஆதரவளித்தன. சமஸ்தான மெங்கும் போராட்டம் வெகு வேகமாகப் பரவியது.

இதற்குப் பின்னர்தான் மாநிலத்தில் காங்கிரஸ் அமைப்பை உருவாக்குவதற்காக ஒரு முயற்சி மேற்-கொள்ளப்பட்டது. பிறகு அதுவும் கைவிடப்பட்டது.

இக் காலகட்டத்தில்தான், தெலுங்கானாவின் கிராமப் பகுதிகளில் ஆந்திர மகா சபை ஒரு வலுமிக்க அரசியல் அமைப்பாக வேர்விடத் தொடங்கியது.

ரவி நாராயணன் ரெட்டி, பத்தம் எல்லாரெட்டி போன்ற தீவிர மனோபாவங்கொண்ட ஊழியர்கள் ஆந்திர மகாசபையின் முக்கிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்-பட்டனர்.

இவ்விருவரைத் தவிர, சி. லெட்சுமி நரசய்யா, தேவுள பள்ளி வெங்கடேஸ்வரராவ் போன்ற தீவிர மனோபாவங்

www.tamilarangam.net



கொண்ட ஊழியர்கள் பலரும் இவ்வமைப்பின் முக்கிய பொறுப்புக்களில் செயல்படத் துவங்கினர்.

இச் சமயத்தில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆந்திர மகாசபையின் போர்க் குணமிக்க இந்த ஊழியர்களோடு தொடர்பேற்படுத்திக் கொண்டு, அவர்களைக் கட்சிக்குள் ஈர்த்தது.

பல தரப்பட்ட மக்கள் பகுதியினரையும் இணைத்து, ஒரு போர்க் குணமிக்க ஐக்கிய முன்னணி அமைப்பாக 'ஆந்திர மகாசபை'யை உருவாக்கக் கம்யூனிஸ்ட் கட்சி பாடுபட்டது.

1940 ஆம் ஆண்டு கால கட்டத்தில்தான், இதுவரை தீர்மானங்களையும் கோரிக்கைகளையும், நிறைவேற்றுவதாக மட்டுமே இருந்த ஆந்திர மகாசபை, அவற்றிற்காக மக்களைத் திரட்டிப் போராடுகிற அமைப்பாகவும் உருவெடுத்தது.

1942 ஆம் ஆண்டில், ஆந்திர மகாசபையின் பல முக்கிய தலைவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

மிதவாதக் கருத்துள்ளவர்கள் ஆந்திர மகாசபையிலிருந்து வெளியேறினர்.

கிராமங்கள் தோறும் கிளைகள் ஏற்படுத்தப்பட்டுக் கட்டுறுதியுள்ள ஒரு போர்க்குணமிக்க அமைப்பாக ஆந்திர மகாசபை மாற்றப்பட்டது.

"நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் வேண்டும்! தெலுங்கு மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்! புதிய கல்விக் கூடங்கள் திறக்கப்பட வேண்டும்!" என்று தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருந்த 'ஆந்திர மகாசபை'யை நிஜாமின் அரசிற்கு எதிரான ஒரு சமரசமற்ற போராட்டத்தை நடத்துகிற அமைப்பாக மட்டுமின்றி, நிலப்பிரபுத்துவத்திற்கெதிராக மக்களைத் திரட்டி ஒரு உறுதி மிக்க போராட்டமாக-வெகு ஜன எழுச்சியாக-வளர்த்தெடுப்பதில் கம்யூனிஸ்டு கட்சியும், கம்யூனிஸ்டுகளும் முக்கியப் பங்கு வகித்தனர்.

www.tamilarangam.net

# 4. எழுச்சியின் முதல் கட்டம்

ஆந்திர மகா சபை 1944 ஆம் ஆண்டிலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ்ச் செயல்படத் துவங்கியது. தொடர்ந்து, கட்டாய இலவச உழைப்பிற்கெதிராக, சட்ட விரோத வரி வசூல்களுக்கெதிராக, நில வெளியேற்றத்திற் கெதிராகத் தீரமிக்கப் போராட்டங்கள் துவக்கப்பட்டன.

ஜமீன்தார்களுக்கும், தேஷ்முக்குகளுக்கும், இது பெருஞ் சினத்தை மூட்டிற்று. அவர்கள் பதிலடி கொடுக்கும் வகையில் செயல்படத் துவங்கினர்.

ஆயுதமேந்திய குண்டர் படையொன்றை ஏற்படுத்திப் போராடுபவர்கள் மீது ஏவினர்.

சங்கத்தலைவர்களைக் கொலை செய்யும் படியும் விவசாயிகளின் விளைநிலங்களில் கள்ளத்தனமாக ஆறுவடை செய்யும் படியும் அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால் போராடுகின்ற விவசாயிகள் இதற்குச் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. ஆவேசத்துடன் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். ஊரில் நுழையும் குண்டர்களை ஓட ஓட விரட்டியடித்தனர்.

ஆத்திரமுற்ற நிலப்பிரபுக்கள், சங்கத்தலைவர்கள் மீது பொய்ப்புகார்களைச் சுமத்திப், பொய்வழக்குகளை ஜோடித்துச் சிறையில் அடைத்தனர்.

இந்தச் சூழலில்தான்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடவண்டி கிராமத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

அன்று, 1946 ஆம் வருடம் ஜூலை மாதம் 4 ஆம் தேதி கடவண்டி கிராமத்தின் சங்கத்தலைவர்களின் இல்லங்களை ஜமீன்தார் விஷ்ணூர் ராமச்சந்திர ரெட்டியின் அடியாட்கள் சூழுகின்றனர். அவர்களின் கையில் பயங்கரமான ஆயுதங்கள்!

வீட்டிலுள்ளவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். கொலை வெறித் தாக்குதல்! சங்கத் தலைவர்கள் படுகாயமுறுகின்றனர்.

தலைவர்கள் தாக்கப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் பரவுகிறது. விஷயமறிந்து மக்கள் கூடிவிடுகின்றனர். ஆத்திரமுற்ற அவர்கள் தடிகள், கவண் கற்கள் இவற்றோடு கோஷத்தை முழக்கிக் கொண்டே ஜமீன்தாரின் மாளிகையை நோக்கி ஊர்வலமாய்ச் செல்கின்றனர். ஊர்வலம் மாளிகையை நெருங்கியதுதான் தாமதம். அங்குப் பதுங்கியிருந்த ஜமீன்தாரின் காவலாளிகள் சுடத் தொடங்குகின்றனர்.

துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ஒரு தோட்டா ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி வந்த சங்கத்தலைவர் தொட்டி குமரய்யாவின் உயிரைப் பறிக்கிறது.

ரத்த வெள்ளத்தில் வீழ்கிறார் தொட்டி குமரய்யா... எண்ணற்றோர் படுகாயமுறுகின்றனர்.

ஆனால் விவசாயிகள் வெருண்டோடவில்லை. முன்னிலும் அதிகச் சீற்றத்துடன் ஜமீன்தாரின் வீட்டை முற்றுகையிடுகின்றனர்.

மேலும் 200 குண்டர்களைச் சேர்த்துக் கொண்டு ஜமீன்தாரின் மகன் விவசாயிகளைத் தாக்கத் தொடங்குகிறான்.

மக்களின் ஆவேசத்திற்கு முன் தாக்குப் பிடிக்க முடியாமல் குண்டர்கள் ஓடி ஒளிகின்றனர்.

அறுபது பேர் அடங்கிய போலீஸ் படை கிராமத்திற்கு

www.tamilarangam.net



வருகிறது! குண்டர்களைக் கைது செய்யாமல் அவர்களைப் பாதுகாத்து ஜமீன்தாரிடம் ஒப்படைக்கிறது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கிறேனென்று சங்கத் தலைவர்களின் மீது ஆறு வழக்குகளைப் பதிவு செய்கிறது.

தொட்டி குமரய்யாவின் மரணச் செய்தி அக்கம் பக்கம் உள்ள கிராமங்களுக்குப் பரவியது. சாரி சாரியாக மக்கள் கடவண்டி கிராமத்தில் கூடத் தொடங்கினர்.

வீரத்தியாகி குமரய்யாவின் உடல் பெரும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.

இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட விவசாயிகள் தொட்டி குமரய்யாவின் சடலத்தின் மீது ஆணையிட்டு,

"எது நேரிட்டாலும் இனிப் பணியமாட்டோம். ஜமீன்தாரின் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்" எனச் சூளுரைத்தனர்.

தியாகி குமரய்யாவின் மரணம் தெலுங்கானா முழுவதும் பரவியது.

குமுறிக் கொண்டிருந்த விவசாயிகளை அது உலுக்கி விட்டது.

நலகொண்டா மாவட்டத்தின் அனைத்துத் தாலுகாவிலும் இதன் தாக்கம் பலமாக இருந்தது.

விவசாயிகள் கிளர்ந்தெழுந்தனர். வீரத் தியாகி குமரய்யாவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்வலம் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

விவசாயிகள் கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள மக்களைத் தட்டி எழுப்பினர். விவசாயிகளின் கோரிக்கை-களுக்கு, சங்க நடவடிக்கைகளுக்கு வெகுஜன ஆதரவைத் திரட்டினர். குமரய்யாவின் தியாகத்தை நினைவு கூர்ந்து

www.tamilarangam.net



பாடல்கள் புனையப்பட்டன. குமரய்யாவின் நினைவு, விவசாயிகளை வீறுகொள்ளச் செய்தது.

தியாகி குமரய்யா-

போராடும் விவசாயிகளின் ஆதர்ச புருஷனாகத் திகழ்ந்தார்.

அடுத்த மூன்று மாதங்களுக்கு ஜமீன்தாருடைய ஆட்களை வயலில் இறங்கி வேலை செய்ய கிராம மக்கள் அனுமதிக்கவில்லை.

கோட்டையைப் போன்ற விசாலமான ஜமீன்தாரின் வீடுகளின் முன்பு செங்கொடிகள் ஏற்பட்டன.

"இலவச உழைப்பு இனி இல்லை!"

"சங்கத்தின் உத்தரவை ஏற்றுக்கொள்! இல்லையேல் சமூக பகிஷ்காரம்" என்று நிலப்பிரபுக்களை எச்சரித்தனர்.

தெலுங்கானா முழுவதும் பிரம்மாண்டமான ஊர்வலங்கள் தொடர்ந்து நடைபெற்றன.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் எல்லாப் போராட்டங்களிலும் பெண்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டதுதான்.

தெலுங்கானா விவசாயிகளைப் பாதித்து வந்த நிலப் பிரச்னை, நிலவெளியேற்றம், கட்டாய இலவச உழைப்பு, கட்டாய தானிய வரி போன்ற அவர்களின் வாழ்க்கை தொடர்பான பிரச்னைகள், 'ஜமீன்தாரி ஒழிப்பு' என்ற முழக்கத்துடன் இணைக்கப்பட்டது.

மக்களின் எதிர்ப்பு வெள்ளம் கரை புரண்டு கொண்டிருந்த இந்நேரத்தில் அரசாங்கத்தால் தானிய வசூலை வசூலிக்க முடியவில்லை.

அரசு அதிகாரிகள் எவரும் கிராமங்களில் நுழைய முடியவில்லை. கட்டாய இலவச உழைப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

www.tamilarangam.net



தேஷ்முக்குகளும், கிராம அதிகாரிகளும் ஊருக்குள் தலைகாட்ட முடியாமல் வெளியே ஓடவேண்டிய நிலைமை உருவானது.

ஆரம்பிக்கப்பட்ட சில வாரங்களுக்குள் இவ்வியக்கம் நலகொண்டா, கம்மம், வாரங்கல் மாவட்டங்களிலுள்ள நானூறுக்கும் மேற்பட்ட கிராமங்களில் பற்றிப் பரவியது.

இயக்கம் வலுவடைந்துகொண்டிருந்த இந்நேரத்தில் தேஷ்முக்குகளும் ஜமீன்தார்களும் சும்மாயிருக்கவில்லை.

துப்பாக்கிகள், நாட்டு வெடிகுண்டுகள் இவற்றோடு ஒரு குண்டர் படையை உருவாக்கினர்.

விவசாயிகள் அடிக்கடி இக்குண்டர்களின் தாக்குதலுக்கு ஆளாயினர்.

திடீரென்று இரவில் வீட்டைச் சூழ்வார்கள். வயல்களுக்குத் தீ வைப்பார்கள். முதியோர், பெண்கள் என்ற பாரபட்சமின்றிக் கொலைத் தாக்குதல் நடத்துவார்கள்.

இதனால் விவசாயிகள் எந்நேரமும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டிய நிலையேற்பட்டது.

பதிலடி கொடுக்கும் வகையில் தடிகள், கவண் கல், இவற்றோடு விவசாயிகள் திருப்பித் தாக்கினர். வெந்நீர், மிளகாய்ப்பொடி இவற்றைக் கொண்டு பெண்களும் பதிலடி கொடுக்க ஆரம்பித்தனர். குண்டர்களின் தாக்குதல் கட்டுக் கடங்காத நிலையை உணர்ந்து கட்சியும், விவசாய சங்கமும், தங்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்க ஒரு தொண்டர் படையை உருவாக்கியது.

'தொண்டர் படையினர் யாரும் ஆயுதம் ஏந்தக் கூடாது!' என்றுதான் கட்சி முதலில் கட்டளையிட்டிருந்தது.

குண்டர்களின் தாக்குதலோடு போலீசின் தாக்குதலும் அதிகரித்துக் கொண்டு வந்தது. இவற்றின் பலம் முழுமையும் விவசாயிகளின் எழுச்சியை அழித்தொழிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவற்றிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் கட்சிக்கும், விவசாய சங்கத்திற்கும் ஏற்பட்டது.

அதனால் சுய பாதுகாப்பிற்காகத், தொண்டர்கள் ஆயுத மேந்தலாம் என்று கட்சி முடிவெடுத்தது.

இம்முடிவிற்குக் கட்சியின் அரசியல் தலைமைக் குழுவும் (பொலிட்பீரோ) ஒப்புதல் அளித்தது.

இது தொடர்ந்து, குறைந்த அளவிலான ஊழியர்கள் துப்பாக்கிகளைக் கையாள்வதற்கும், வெடிமருந்தைப் பயன்படுத்துவதற்கும் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

நிஜாம் மன்னனின் அரசாங்கம், விவசாயிகளின் எழுச்சியை ஒடுக்கியே தீருவதென்று முழு மூச்சுடன் செயல்பட ஆரம்பித்துவிட்டது.

விவசாயிகளின் மீது முழுபலத்தையும் பிரயோகித்து ஒரு வெறித்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது.

கட்சி, சங்கம் இவற்றின் முன்னணியில் செயல்படுகிற நூற்றுக்கணக்கான ஊழியர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். கைதாகாமல் தப்பிக்கும் படியும் அல்லது ஜாமினில் வந்தால் தலைமறைவாகிவிடும்படியும் ஊழியர்களை எச்சரித்தது.

'தலைமறைவானவர்களின் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்வதையும், ஏலமிடுவதையும் அனுமதிக்காதீர்!' என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

போர்க்குணமிக்க விவசாயிகள் பலர் கட்சியின் அறை கூவலுக்குச் செவி சாய்த்தனர்.

கிராமங்களைப் போலீசார் சுற்றி வளைக்கும் போது அதைச் சமாளிக்கப் புதிய போராட்ட வடிவங்களை மேற்கொண்டனர்.

இறுதியில் நிஜாம் மன்னன் தனது ராணுவம் முழுவதையும் களத்தில் இறக்கினான்.

தெ – 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிராமங்களில் ராணுவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன.

இரவு நேரங்களில் கிராமங்களை முற்றுகையிட்டு விவசாயிகளை ராணுவம் தாக்க ஆரம்பித்தது.

சங்கத்தின் கமிட்டி உறுப்பினர்களையும், கட்சித் தலைவர்களையும் காட்டிக் கொடுக்கும்படி அப்பாவி மக்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்.

ஆனால் விவசாயிகள் இவற்றால் சிறிதும் கலங்கவில்லை. இரவில் வயல்களில் அவர்கள் பதுங்கிக் கொண்டனர். பெண்கள், கூட்டம் கூட்டமாக ஒரே இடத்தில் தங்கித் தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

விவசாயிகளின் எழுச்சியைக் கண்டு பயந்து கிராமங்களை விட்டு வெளியேறிய தேஷ்முக்குகள், படேல்கள், பட்வாரிகள் முதலானோர் ராணுவத்தின் உதவியோடு மீண்டும் கிராமங்களுக்குக் குடிபுகுந்தனர்.

கிராமங்களிலிருந்த துரோகிகள், போராட்டத் தலைவர்களைக் காட்டிக் கொடுக்கவும் ஆரம்பித்தனர்.

பல இடங்களில் மோதல் படுபயங்கரமாக நடந்தது.

இப்படி நடந்த ஒரு மோதலில்தான் 'பிச்சி ரெட்டி' என்னும் நிலப்பிரபு கொல்லப்பட்டான்.

இது ஜமீன்தார்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் பீதியை ஏற்படுத்த, அவர்கள் மறுபடியும் நகரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

பல இடங்களில் தாக்குதல் பலமாக இருந்தது. பெண்களும் கையில் கிடைக்கும் ஆயுதங்களோடு தாக்குதலில் ஈடுபட்டனர்.

நலகொண்டா மாவட்டம் முழுவதும் போலீசாருக்கும், நிலப் பிரபுக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் சுவரொட்டிகள் ஸ்தல மக்களால் ஒட்டப்பட்டன.

இவையெல்லாம்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சங்கம் மறுபடியும் செயல்படத் துவங்கிவிட்டது என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்தன.

எதிரிகள் பாதுகாப்பின்றி நகரமுடியாத ஒரு சூழ்நிலை உருவானதும், அவர்கள் சற்றுப் பின்வாங்கினர்.

சங்கத் தலைவர்களைத் தேடும் பணியை நிஜாமின் அரசாங்கம் கைவிட்டது.

1946ஆம் வருடம் ஜூலை மாதம் துவங்கிய இந்தப் போராட்டம், 1947 ஆம் வருடம் மே மாதம் வரையில் இதே நிலைமையில்தான் இருந்தது.

இதுதான் தெலுங்கானா எழுச்சியின் முதல் கட்டமாகும்.

முதல் கட்ட எழுச்சி பல விஷயங்களைச் சாதித்தது.

அது, கட்டாய இலவச உழைப்பு, வெட்டி, சட்ட பூர்வமற்ற வசூல், கட்டாய தனி வரி ஆகிய இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

தேஷ்முக்குகளாலும், நிலப்பிரபுக்களாலும் பறிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் கையகப்படுத்தியது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தேவைகளுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கத்தை நிலப்பிரபுத்துவத்திற்கும் நிஜாமின் சர்வாதிகாரத்திற்கும் எதிரான இயக்கமாக வளர்த்தெடுத்தது.

நிஜாமின் போலீஸ், ராணுவம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும்படி மக்களைத் தயார் செய்தது.

பெருமளவு பெண்களை இயக்கத்திற்குள் ஈர்த்தது. அவர்களை ஆயுதமேந்திப் போராடும் வீராங்கனைகளாக மாற்றியது.

கட்சி ஸ்தாபனம், சங்கம் இவற்றின் கட்டுறுதிமிக்க அமைப்பிற்குப் பின்னால் மக்களை அணிதிரளச் செய்தது.

www.tamilarangam.net



சங்கம் என்பது மக்களின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டும் தலைவனாக மாறியது.

புரட்சிகர கலை இலக்கியங்கள் வளர்த்தெடுக்கப் பட்டன.

கிராமியக் கலை வடிவங்களுக்குப் புதிய உள்ளடக்கங்களைக் கொடுத்து ஒரு வீறுமிக்க வெகுஜனக் கலாச்சாரத்தை உருவாக்கியது. பொருளாதார அடித்தளத்தில் நடத்தப் பெறும் தாக்குதலுக்குத் துணையாகச்சமூகத்தின் கலாச்சார மேல் தளத்தில் பொருந்துகிற ஒரு வலுமிக்கக் கலாச்சாரப் படையையும் பெற்றுத் தந்தது.

இச்சாதனையின் நிலைக்களன் மக்கள் தாம்.

இச்சாதனைகள் யாவும் படிப்படியாக ஒரு வளர் நிலை அடிப்படையில் நிகழ்ந்தவைதான்.

ஆனால் இவற்றில் கட்சியும், சங்கமும் ஒரு மறுக்க முடியாத தலையாய பங்கினை வகித்தது.

மக்களை வழி நடத்துவது, முன்னெடுத்துச் செல்வது, கட்சி, ஸ்தாபனம், சங்கம் இவற்றின் பொறுப்பு.

முதலில் சங்கம், அனைத்து வகைப்பட்ட கட்டாய இலவச உழைப்பையும், சட்டவிரோத வசூல்களையும் கட்டாய தானிய வரியையும் தடுத்து நிறுத்தும்படி மக்களைத் தயார்ப்படுத்தியது.

பிறகு குத்தகையாளர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களை நிலப்பிரபுக்களிடமிருந்து கையகப்படுத்த வேண்டுமென்றும்,

சட்டவிரோதமாகப் பறிக்கப்பட்ட நிலங்களை நிலப் பிரபுக்களிடமிருந்து மீட்க வேண்டுமென்றும்,

கட்சியும், ஆந்திர மகா சபையும் தீர்மானித்து, இவற்றிற்கு ஆதரவாக மக்களைத் திரட்டியது, செயலில் இறங்கச் செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலில் குத்தகை குறைக்கப்பட்டது. பிறகு பெரும் நிலப்பிரபுக்களுக்குக் குத்தகை தருவது நிறுத்தப்பட்டது.

அரசாங்கத்திடமும், நிலப்பிரபுக்களிடமும் இருக்கும் தரிசு நிலங்கள் கைப்பற்றப்பட்டுக் கிராமப்புற ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

கிராமப்புற அதிகாரிகள், நிலப்பிரபுக்கள், கந்து வட்டிக்காரர்கள் இவர்களிடமிருந்து அடமான பத்திரங்கள், பிராமிசரி நோட்டுகள் கைப்பற்றப்பட்டுக் கொளுத்தப்பட்டன.

நிலப்பிரபுக்களிடமிருந்து உபரி நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

இவை யாவும் முதல்கட்ட எழுச்சியில் சாதிக்கப்பட்டவைதான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5. எழுச்சியின் இரண்டாவது கட்டம்

இந்தியா விடுதலையடையும்போது, மன்னராட்சி நடைபெற்று வந்த சுதேசி சமஸ்தானங்கள் தொடர்பாகப் பிரிட்டீஸார் ஒரு நிபந்தனை விதித்தனர்.

இத்திட்டத்தின்படிச்

சுதேசி சமஸ்தானங்கள், இந்தியாவோடு இணைவதா? பாகிஸ்தானோடு இணைவதா? அல்லது தனியாக இயங்குவதா என்று முடிவு செய்யும் உரிமை மன்னர்களுக்கே வழங்கப்பெற்றது.

இரண்டாம் உலக யுத்த முடிவிற்குப் பின் ஏற்பட்ட பெரும் கொந்தளிப்பைக் கண்டு பயந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சுதந்தரம் வழங்க ஒப்புக்கொண்ட நேரத்திலும் கூட, நாட்டைப் பிரிவினை செய்ததோடு, சுதேச சமஸ்தானங்களையும் தனியே பிரித்து வைக்கச் சதி செய்தது.

ஹைதராபாத் நிஜாம் இந்தியாவோடு இணைய மறுத்தான். தொடர்ந்து, ஹைதராபாத் மாநிலத்தை இந்தியாவோடு இணைக்க வேண்டுமென்று கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆந்திர மகாசபை, காங்கிரஸ் கட்சி ஆகிய மூன்றும் இணைந்து ஒரு போராட்டத்தைத் துவக்கின.

ஹைதராபாத்தை இந்தியாவில் இணைப்பது, நிஜாம் மன்னனுக்கெதிராக மக்களை அணி திரட்டுவது, ஆயுதமேந்திப் பேராடுவது எனும் வகையில் கம்யூனிஸ்ட் கட்சி செயல்பட்டது.

கிராமம் கிராமமாக இவ்வியக்கத்திற்கு ஆதரவாகப்

www.tamilarangam.net



பிரச்சாரம் நடத்தப்பட்டது. ஆயுதங்களை வாங்குவதற்காக திரட்டப்பட்டது.

விஜயவாடாவில் மட்டும் மூன்றே தினங்களில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய் நிதி குவிந்தது. அந்த அளவுக்கு மக்கள் ஆதரவளித்தனர்.

மாணவர்கள் பள்ளிகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் குதித்தனர். இப்படிப் போராட்டத்தில் இறங்கிய மாணவர்களில் பலர் பிற்பாடு கம்யூனிஸ்டு தலைவர்களாக மாறினர்.

கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸுக்கும் சில விஷயங்களில் ஒருமித்த கருத்து இருந்தது. நிஜாமை எதிர்ப்பது, ஹைதராபாத்தை இந்தியாவோடு இணைப்பது இவை போன்றவை அவை.

ஆனால் முக்கியமான ஒரு விஷயத்தில் அவர்கள் கடுமையாக வேறுபட்டனர்.

நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டத்தை அவர்கள் ஆதரிக்க மறுத்தனர்.

கள்ளுக்கடைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸார் கோரினார்கள். கட்சியும் உடன்பட்டது. கூட்டாக ஊர்வலம் சென்றார்கள்.

நில உச்சவரம்பு விஷயத்தில் காங்கிரசார் ஐநூறு ஏக்கர் ஒருவர் வைத்திருக்கலாம் என்றனர். ஆனால் கம்யூனிஸ்டுகள் பத்து ஏக்கர்தான் வைத்திருக்க வேண்டும்; அதுவும் துரோகம் செய்யாத நிலப்பிரபுக்களுக்கு மட்டும்தான் இது பொருந்தும் என்றனர்.

இந்தச் சமயத்தில்தான்,-

1947 ஆம் வருடம் அக்டோபர் மாதம்-

அதுவரை இந்தியாவோடு இணையும் யோசனையை நிராகரித்து வந்த நிஜாம் இந்திய அரசாங்கத்தோடு ஒரு விசேஷ ஒப்பந்தம் செய்துகொண்டான்.

www.tamilarangam.net



அதன்படி ஏற்கெனவே இருந்த நிலை அப்படியே தொடருமென்று இந்திய அரசு ஒப்புதல் அளித்தது.

பதிலுக்கு நிஜாமிடமிருந்து ஒரு உறுதிமொழியைப் பெற்றது.

தனது படைகளை அதிகரிப்பதில்லையென்றும், வெள்ளியிலிருந்து ராணுவ உதவி பெறுவதில்லையென்றும் நிஜாம் உறுதியளித்தான்.

ஆனால் இந்த ஒப்பந்தம் நிஜாமிற்கு எதிராகக் கிளர்ந்த மக்கள் இயக்கத்தில் எந்தவிதமான மாறுதலையும் உண்டாக்கவில்லை.

மக்களின் மனோபாவம் வேறாக இருந்தது! நிஜாமை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றுதான் அனைவரும் விரும்பினர்.

நிஜாமிற்கெதிரான இயக்கம் மேலும் வலுவடைந்து வந்தது.

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளிகள், நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள், வளர்ந்துவரும் முதலாளிகள், பணக்கார விவசாயிகள் அனைவரும் நிஜாமுக்கு எதிராகக் கிளம்பினர்.

முஸ்லீம்களில் முற்போக்கு எண்ணம் கொண்ட ஒரு பகுதியினர் நிஜாமிற்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கினர்.

காங்கிரஸ் கட்சி, இந்திய ஒன்றியத்தில் ஹைதராபாத் இணைய வேண்டும் என்றுதான் கோரியது.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி 'இந்தியாவில் இணைந்தால் மட்டும் போதாது; ஹைதராபாத் மாநிலத்தைக் கலைக்க வேண்டும்! அதன் பகுதிகளை மொழி அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்களோடு இணைக்க வேண்டும்! மொழிவழி மாநிலங்களை உருவாக்க வேண்டும்!' என்று கோரியது.

www.tamilarangam.net



இவற்றிற்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சியும், ஆந்திர மகாசபையும் மக்களைத் திரட்டுவதோடு மட்டும் நிற்கவில்லை.

மக்கள் எழுச்சியை ஒரு திட்டவட்டமான நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு எழுச்சியாக உருமாற்றியது, முனைப்படுத்தியது.

போகப் போக, நிஜாமின் ஆட்சி ஆட்டங் காண ஆரம்பித்துவிட்டது.

சீற்றங் கொண்ட நிஜாம் பெரும் வன்முறை வெறியாட்டத்தைத் துவக்கினான். 'காசிம் ரஸ்வி' என்பவன் தலைமையில் ஒரு கொலைகார குண்டர் படையைத் திரட்டினான்.

இவர்கள் ரஜாக்கர்கள் என்றழைக்கப்பட்டனர்.

இந்த ரஜாக்கர்கள் இயல்பாகவே மிருக பலம் பெற்றவர்கள். ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் கை தேர்ந்தவர்கள்.

இவர்கள் ராணுவத்தின் பக்க பலத்தோடு விவசாயிகளைத் தாக்க ஆரம்பித்தனர்.

இதனால்,

இதுவரை சந்தித்திராத ஒரு கொடூரமான தாக்குதலை மக்கள் சந்திக்க நேர்ந்தது.

எண்ணிலடங்காத விவசாயிகள், சங்கத்தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

தானியங்கள், செல்வங்கள், கொள்ளையடிக்கப்பட்டன.

குடிசைகள் தீக்கிரையாயின. பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் கடுமையான சித்ரவதைகளுக்கு உள்ளாயினர்.

ஆனால் இந்தத் தருணம் பார்த்து காங்கிரஸ் கட்சி தனது சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தது.

www.tamilarangam.net



கம்யூனிஸ்ட் கட்சி, ஆந்திர மகாசபை இவற்றிற்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்று அறிவித்தது.

தனது உறவை முறித்துக் கொண்டது.

நிஜாமிற்கு எதிரான இயக்கம் நிலப்பிரபுத்துவத்திற்கெதிரான இயக்கமாக மாறியதை அவர்களால் பொறுக்க முடியவில்லை.

இதனால் காங்கிரஸ் தலைமை இவ்வாறு முடிவெடுத்தது.

சில காங்கிரஸ்காரர்கள் வெறித்தனமாக நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கி மக்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர்.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியும் சங்கமும் பின்வாங்கவில்லை.

பிரபுத்துவத்திற்கெதிராக நிஜாமின் ஆட்சிக்கெதிராக ரஜாக்கர்களின் கொலைவெறித் தாக்குதலுக்கெதிராக,

ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னிலும் அதிக வீரியத்தோடு ஒருமுகப்படுத்தின.

தெலுங்கானா பகுதி முழுவதும் போராட்டம் வெடித்தது.

10 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட கிராம ஸ்குவாடுகள் (சிறு குழுக்கள்) அமைக்கப்பட்டன.

சகலவிதமான பயிற்சிகளும் பெற்ற ஒரு நிரந்தரமான கொரில்லாப்படை அமைக்கப்பட்டது.

எந்தவிதத் தாக்குதலையும் சந்திக்கும் வகையில் இவர்கள் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர்.

கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்படையில் செயலாற்றினர்.

www.tamilarangam.net



எண்ணற்ற மோதல்களால் இந்தக் காலத்தில் மட்டும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

ஆனால், அதைவிடப் பல மடங்குக்கும் அதிகமான எண்ணிக்கையில் நிஜாமின் ராணுவத்தினர், ரஜாக்கர்கள், போலீசார், நிலப்பிரபுக்கள், அவர்களின் அடியாட்கள் கொல்லப்பட்டனர்

இவர்கள் கிராமம் கிராமமாக விரட்டப்பட்டனர்.

பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் விவசாயிகள் வசமானது.

கிராம கம்யூன்கள் (கமிட்டிகள்) அமைக்கப்பட்டது.

நில விநியோகம், கல்வி, சுகாதாரம் மற்றும் இதர கிராம சேவைகள் அனைத்தும் கம்யூனைச் சேர்ந்த மக்கள் குழுக்களாலேயே நிர்வகிக்கப்பட்டன.

இது வரையில்லாத ஒரு புதிய உத்வேகம், ஒரு புதிய எழுச்சி மக்களிடையே காணப்பட்டது.

பத்துப் பதினைந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரள்வர்.

தடிகள் மற்றும் இதர ஆயுதங்களோடு மற்ற கிராமங்களை நோக்கிச் செல்லுவர்.

கிராமத்தை வசப்படுத்தி தேசியக் கொடியும், செங்கொடியும் ஏற்றப்படும்.

நிலப்பிரபுக்களின் தானியக் கிடங்குகளின் கதவுகள் உடைக்கப்பட்டுத் திறக்கப்படும்.

தானியங்கள் அனைத்தும் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இது தெலுங்கானா பகுதி முழுதும் சர்வ சாதாரண நிகழ்ச்சிபோல் நடந்து வந்தது.

ரஜாக்கர்களோ...

www.tamilarangam.net



சிறுநகரங்கள், கிராமங்கள் இவற்றில் தங்களது முகாம்களை அமைத்து இரவு நேரங்களில் வந்து தாக்குதலைத் தொடுப்பார்கள்.

கிராமத்தில் ஏற்றப்பட்டிருந்த கொடிகள் இறக்கப்பட்டுக் கிழித்தெறியப்படும்.

கட்டாய தானிய வசூல், சுங்கவரி ஆகியவை பலவந்தமாக வசூலிக்கப்படும்.

மறுப்பவர்களைக் கட்டி வைத்துச் சவுக்கால் அடிப்பார்கள். இளம் பெண்களைத் தூக்கிச் சென்று கற்பழிப்பார்கள்.

ஒரு கிராமத்தில் ரஜாக்கர்கள் வந்து போனார்கள் என்றால் கொள்ளை-நோய் ஒன்று வந்து போனது போல் இருக்கும்.

விவசாயிகளும் மறைந்திருந்து எதிர்த்தாக்குதல் தொடுப்பார்கள். திருப்பித் தாக்குவதில் மத இன வேறுபாடில்லாமல் ஒருமுகமாகத் திரண்டு தாக்குவர்.

ஆரம்ப காலத்தில் விவசாயிகளிடம் சரியான ஆயுதங்கள் இருந்ததில்லை. இதனால் பல நேரங்களில் ரஜாக்கர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் போனதுண்டு.

நாளடைவில் விவசாயிகள் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

கிராம ஸ்குவாடுகள் இல்லாத ஊர்களில், இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து ஸ்குவாடுகளை அமைத்தனர்.

போலீஸ் நிலையங்களையும், சுங்கச் சாவடிகளையும், ரயில்வே பாதுகாப்புப் படையினர் தங்குமிடங்களையும், முற்றுகையிட்டு இளைஞர்கள் ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

சில நேரங்களில் ரஜாக்கர்களின் முகாம்களையே தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றியதுண்டு.

www.tamilarangam.net



இவ்வாறு தங்களை ஆயுதபாணிகளாக்கிக்கொண்டனர்.

இப்போராட்டத்தில் மக்கள் பல யுக்தி முறைகளையும் வகுத்தார்கள்.

எதிரியை அலைக்கழியச் செய்வது, அவன் எதிர்பாராத நேரத்தில் தாக்குவது, அவன் தாக்குதலுக்குத் தயாராகும் போது பின் வாங்குவது, அவனைக் களைப்படையச் செய்து பின்னர் தாக்குவது-

இப்படிப் பல யுக்திகளைக் கையாண்டனர்.

தங்கள் கிராமங்களைச் சூறையாட வந்த ரஜாக்கர்களையும், போலீசாரையும் எதிர்த்து ஆயுதந்தாங்கிப் போராடியதோடு மட்டும் மக்கள் நிற்கவில்லை. லெவி தானியத்தைக் கொடுக்க மறுத்தனர். நிலவரி, சுங்கவரி இவற்றைச் செலுத்த மறுத்தனர். லெவி முறையில் செலுத்த வேண்டிய தானியத்தையும், நிலப்பிரபுக்களின் கிடங்குகளிலிருந்த தானியத்தையும் மக்களுக்கு முறையாக விநியோகித்தனர்.

உளவாளிகள், ரஜாக்கர்களின் கையாட்களாகச் செயல்பட்டவர்கள், இவர்களைக் கண்டுபிடித்துக் கடும் தண்டனையளித்தனர்.

இந்தச் சமயத்தில்தான், பல குழுக்களை அமைத்துக் கட்சி ஆயுதப் பயிற்சியளித்தது.

ஆயுதமேந்திய நிரந்தரமான ஒரு கொரில்லாப் படையைக் கட்சி தயார் செய்தது.

கிராமங்களில் இரண்டு விதமான குழுக்கள் உருவாக்கப்பட்டன.

இவைகள் தாம் கிராம ஸ்குவாடுகள் என்பது.

இவற்றில் ஒரு குழு கிராம மக்களைப் பாதுகாக்கவும் எதிர்த்தாக்குதல் தொடுக்கவும் பணிக்கப்பட்டது.

www.tamilarangam.net



மற்றொரு குழு நிலப்பிரபுக்களின் தானியங்களைக் கைப்பற்றவும், எதிரிகளின் உடைமைகளை அழிக்கவும் ஏவிவிடப்பட்டது. போராட்ட உணர்வு என்பது தெலுங்கானாவின் ஒவ்வொரு மனிதனிடமும் உரம் பாய்ந்து இருந்தது.

அதனால்தான், பெருத்த உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் அவர்கள் சந்திக்க நேரிட்டும், சற்றும் சளைக்காமல் தீரத்தோடு போரிட்டார்கள்.

இந்தக் கால கட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 3000க்கும் மேற்பட்ட கிராமங்கள் எதிரிகளிடமிருந்து மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட கிராமங்களனைத்தும் மக்கள் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டன.

உண்மையான மக்களாட்சி என்பது அங்குதான் நிலவி வந்தது.

கட்சியின் அறைகூவலுக்கு இணங்கிப் பெருவாரியான மக்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய சமூக, பொருளாதார அரசியல் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றினர்.

சுதந்திர இந்தியாவின் ராணுவம் ஹைதராபாத்தில் நுழையும் வரை இந்நிலைமை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் நடத்தப் பெற்ற போராட்டங்களனைத்தும் புதிய படிப்பினைகளைப் பெற்றுத்தந்தன.

நிலங்களைப் பறித்து, நிலமற்ற விவசாயிகளுக்கும் இலவசமாக விநியோகம் செய்தது; கிராம அமைப்புகளை முறையாக நிறைவேற்றியது; இவையெல்லாம் இப்போராட்டக் காலத்தின் மிகச் சிறந்த சாதனைகளாகும்.

மேலும், தங்கள் உயிரைத் திரணமாக மதிக்கும் ஆயுதந் தாங்கிய கொரில்லாப் படையொன்றை உருவாக்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓரளவுக்கு ஆயுதப் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான தொண்டர்களை உருவாக்கியது-

இப்படையினரின் வழிகாட்டுதலின் கீழ், உத்வேக மூட்டப்பட்ட கிராமப்புற மக்கள் அணி திரண்டது.

அதுமட்டுமல்லாது மக்கள் நில விநியோகத்திலும் கிராம ஆட்சிக் குழுக்களை இயக்குவதிலும் முறையாக ஈடுபட்டனர்-

இவையெல்லாம், மக்களாட்சியின் உருவமும், உள்ளடக்கமும் எவ்வாறு இருக்கக்கூடும் என்பதைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டின.

இது மற்றுமொரு சாதனை.

விவசாயிகள் நலனுக்குத் துரோகம் இழைத்து நிஜாமுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் கையாட்களாக, ஏஜண்டுகளாகச் செயல்பட்டவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டது; பிறகு அவர்களைக் கிராம நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரித்துத் தண்டனை வழங்கியது.

உபரி நிலங்கள், தானியங்கள், கால்நடைகள் இவற்றை நிலப்பிரபுக்களிடமிருந்து பறித்து விநியோகம் செய்தது: இவையெல்லாம் இதுவரை இல்லாத புதியதொரு அனுபவத்தை இந்தியப் புரட்சிகர இயக்கத்திற்குப் பெற்றுத் தந்தது.

நிலப்பிரபுக்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த தாங்க முடியாத கடன்களையெல்லாம் ரத்து செய்தது-

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிச்சயித்தது-

அவர்களின் கூலி உயர்விற்கு உத்தரவாதம் அளித்தது-

கால்வாய் வெட்டியது; குளங்களைத் தோண்டியது; தங்களுக்கான பாசனவசதிகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொண்டது:-

www.tamilarangam.net



தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இவை யாவும் கிராமக் குழுக்களின் நடவடிக்கைகள் தாம்.

கிராமக் குழுக்களின் இத்தகைய நடவடிக்கையானது,

தங்கள் பிரச்னைகளுக்குத் தாங்களே விடிவு காண-முடியுமென்ற ஒரு உன்னதமான நம்பிக்கையைத் தெலுங்கானா மக்களின் உள்ளத்திலே விதைத்தது.

தலைமுறை தலைமுறையாகத் தீர்வு காணப்படாத நிலப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டபோது தெலுங்கானா மக்கள் இது வரையில்லாத ஒரு புதிய நம்பிக்கையையும் அரசியல் உணர்வையும் பெற்றனர்.

கடவுள் நம்பிக்கை, மூடப்பழக்கங்கள் அருகி வந்தது.

பகுத்தறிவாளர்கள் பல்லாண்டுகளாகப் பிரச்சாரம் செய்தும், சாதிக்க முடியாத காரியத்தை ஒரு சில மாதங்களில் நில விநியோக முறை செய்து முடித்தது.

தெலுங்கானா போராட்டத்திலே பெண்களின் பங்கு என்பது மகத்தானது.

கிராம ராஜ்யத்தை அமைப்பதற்கான போராட்டத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் பெருமளவில் ஈடுபட்டனர். ஆணுக்குச் சமமான கூலியைப் பெண் பெற்றதில்லை.

குடும்பத்தில் பெண் இரண்டாம் பட்சம்தான். அடுக்களையின் உள்ளில் முடங்கிக் கிடப்பவள்தான் அவள்.

ஆனால் அப்படிப்பட்ட பெண்களும் ஆணுக்குச் சமதையாகப் போராட்டக் களத்தில் ஆயுதமேந்தி நின்றனர்.

ஆணுக்குப் பெண் தாழ்வு என்ற கருத்து பின்னுக்குத் தள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்துக் கிராமக் குழுக்கள் பிரச்சாரம் செய்தன.

கிராமக் குழுக்களுக்குப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

நிஜாம் மன்னனுக்கெதிரான போராட்டத்தில் மக்கள் ஜாதி, மத, இன பேதமின்றி ஒன்றுபட்டுப் போராடியதும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியிருந்ததும் அவர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தின.

தீண்டாமை என்ற பேயை ஓட ஓட விரட்டின.

தீண்டத் தகாதவனாய் இருந்தாலும் உயர் ஜாதிக் காரனாய் இருந்தாலும் எல்லோரும் ஒன்றாகத்தான் குழிகளில் பதுங்கியிருக்க வேண்டும்.

ஒன்றாகத்தான் ரஜாக்கர்களை எதிர்க்க வேண்டும். அவர்களிடையே எந்த உணர்வையும் விடப் போராட்ட உணர்வே மேலோங்கி இருந்தது.

இவை ஒருவரை ஒருவர் மதிக்கும் போக்கை உருவாக்கியது.

இக் கால கட்டத்தில் தாம்,

மக்கள் கலை என்பது உன்னதமான சிகரங்களைத் தொட்டது.

புர்ரகதா, இடையர்பாட்டு, கோலாட்டப்பாட்டு, தாலாட்டுப் பாட்டு போன்ற பல விதமான ஆடல், பாடல் வடிவங்கள் உயிர் பெற்றன.

இவை புதிய உள்ளடக்கங்களைப் பெற்றுப் பாடுபடும் மக்களின் படைப்புத்திறனால் செழுமையடைந்தன.

இந்தச் சமயத்தில் "மாபூமி" (நமது பூமி) எனும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

தெலுங்கானா இயக்கம் நமக்களித்த அரியதொரு கலைப்படைப்பும் இதுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந் நாடகம் தெலுங்கானாவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நடிக்கப்பெற்றது.

புரட்சிகர இயக்கத்தில் வலுவுள்ள ஒரு ஆயுதமாக இது விளங்கியது.

இந்நாடகம் மன்னனது டாம்பீக வாழ்க்கையை அம்பலப்படுத்தியது. எதிரிகளைக் கைது செய்வது, விசாரிப்பது, தண்டிப்புது, இவற்றைப் பிரபலப்படுத்தியது. இயக்க நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரிக்கச் செய்தது.

கிராமம் கிராமமாகச் சென்று, புரட்சிகர எண்ணங்களை வளர்த்தெடுப்பது, சில விநியோகத்தின் அவசியத்தை உணர்த்துவது- இவற்றை இந்நாடகம் தத்ரூபமாக வெளிப்படுத்தியது.

உழைக்கும் மக்களின் உயிரூட்டும் நடிப்பும் எழுச்சிமிக்கப் பாடல்களும் மக்களை வீறுகொள்ளச் செய்தன.

பழமையின் மீதான அளப்பரிய விசுவாசம், அரசாங்கத்திடம் பயம், அடிமை மனோபாவம், வாழ்க்கையில் பற்றின்மை, நாளை பற்றிய அவநம்பிக்கை,

இவ்வாறு பிரபுத்துவக் கலாச்சாரம் மக்களிடையே விதைத்திருந்த உணர்வுகள் எல்லாம் வேரோடு பிடுங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 6. இந்திய ராணுவம் உள்ளே நுழைகிறது

'இந்திய வரலாறு' பின்வருமாறு குறிப்பிடுகிறது...

'...தன் படைகளை விஸ்தரிப்பதில்லை' யென்றும் 'வெளியிலிருந்து ராணுவ உதவிபெறுவதில்லை' யென்றும் அளித்திருந்த வாக்குறுதிகளை நிஜாம்மன்னன் மீறினான்.

1948இல் பாகிஸ்தானிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் ஹைதராபாத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

சுதந்திர இந்தியாவின் மையப்பகுதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ராணுவ அரசியல்தளத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதை நிஜாமின் நடவடிக்கைகள் துல்லியமாக எடுத்துக் காட்டின. இந்திய அரசும் இவற்றை உணர்ந்தது.

அதே சமயம் நிஜாமின் ஆட்சிக்கெதிராக 1946 ஆம் ஆண்டிலேயே துவங்கிய மக்கள் போராட்டங்கள் மாபெரும் விவசாய எழுச்சியாக வளர்ந்து சமஸ்தானத்தின் கிழக்குப் பகுதி (தெலுங்கானா) முழுவதிலும் பரவின.

அது...அண்டையிலுள்ள ஆந்திர மக்கள் வசிக்கும் சென்னை மாகாணத்தின் வடக்கு மாவட்டங்களிலும் வேர்விடத் தொடங்கியது. போராட்டத்தின் வீச்சு அங்குள்ள நிலைமைகளை வரவர அதிகமாகப் பாதிக்க ஆரம்பித்தது.

இச்சூழலில், இந்தியாவிலிருந்து ஹைதராபாத் பிரிவதையும், விவசாயிகள் இயக்கம் ஆந்திராவில் முழுமையாகப் பரவுவதையும் தடுக்கிற ஒரு நோக்கோடு இந்திய அரசு, 1948 செப்டம்பரில் நிஜாமுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தது.

www.tamilarangam.net



ரஜாக்கர் படைப்பிரிவு கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அதில் இருந்தது. ஆனால் நிஜாமிடமிருந்து எந்தவிதப் பிரதிபலிப்புகளும் இல்லை.

தொடர்ந்து, 1948 செப்டம்பர் 3 ஆம் தேதி இந்திய அரசு தனது ராணுவத்தை அனுப்பியது. இந்திய ராணுவம் சமஸ்தானத்திற்குள் புகுந்து ஹைதராபாத்தைக் கைப்பற்றியது!

ஹைதராபாத்துக்குள் நுழைந்த இந்திய ராணுவம் முதலில் ரஜாக்கர்கள் மீது தாக்குதல் தொடுத்தது.

இந்திய ராணுவத்தினரோடு ஈடு கொடுக்க இயலாமல்...ரஜாக்கர்களும் நிஜாமின் ராணுவத்தினரும் சரணடைந்தனர்.

இந்திய ராணுவத்தினரின் வருகையால் உற்சாகம் கொண்ட விவசாயிகள்...கிராமப் பகுதிகளிலுள்ள நிஜாமின் கூலிப்படைகள்மீது, கொடும் தாக்குதல்கள் தொடுக்க ஆரம்பித்தனர். பெரும் நிலப்பிரபுக்களின் மாளிகைகள் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டன. கையில் சிக்கிய ரஜாக்கர்களையும், வெறியாட்டம் நடத்திய நிலப்பிரபுக்களையும் தண்டனையளித்துக் கொன்றனர்.

இறுதியில்-

ரஜாக்கர் குண்டர்படைத் தலைவன் காசிம் ரஜவி, கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டான்.

இந்திய ராணுவம் நுழைந்த ஐந்தாவது நாளில் நிஜாம் மன்னனும் சரணடைந்தான்.

சரணடைந்த அவன் தனது ராணுவத்திற்கும் போலீசுக்கும், ரஜாக்கர் குண்டர் படைக்கும் உத்தரவிட்டான். “இந்திய ராணுவத்தோடு மோதாதே! இந்திய ராணுவத்திற்கு வரவேற்பு கொடு! இந்திய ராணுவத்திற்கு ஒத்துழைப்பு கொடு! எந்த எதிர்ப்பும் கூடாது!” என்று கட்டளையிட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஜாக்கர்கள் அட்டூழியம் ஒழிந்தது குறித்து மக்கள் பெருமகிழ்ச்சியுற்றனர். தெருக்களில் இறங்கி மகிழ்ச்சியோடு கூக்குரலிட்டனர், ஆர்ப்பரித்தனர்.

கொடுங்கோலன் வீழ்ந்தான் என்ற ஆனந்தப் பெரு வெள்ளம் கிராமங்களெங்கும் கரை புரண்டோடியது.

ஆனால் இந்நிலை இரண்டு வாரங்கள் கூட நீடிக்க-வில்லை, குறுகிய காலக் கனவாகத் தோன்றி மறைந்து போனது, ஒரு நீர்க்குமிழி போன்று, விவசாயிகள் விடுவித்து வைத்திருந்த நிலங்களைப் பிடுங்கி மீண்டும் நிலப்பிரபுக்களிடம் கொடுக்கவும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் தொடரவுமே இந்திய ராணுவத்தின் வருகை உதவியது.

இந்திய ராணுவம் விவசாயிகள் மீதும். சங்கத்தினர் மீதும், கம்யூனிஸ்டுகள் மீதும் கோரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. தெலுங்கானாவின் கிராமங்கள் முழுதும் ராணுவ முகாம்களாகவும் சித்திரவதைக் கூடங்-களாகவும் மாறின.

இந்திய ராணுவம் ஹைதராபாத் மாநிலத்தில் நுழைந்து அதைக் கைப்பற்றி இந்திய யூனியனோடு இணைத்த பின்னர் தொடர்ந்து விவசாயிகள் இயக்கத்தின் மீது தாக்குதலைத் தொடுக்கும் என்று கட்சியும் சங்கமும் முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தது.

நேருவின் ராணுவத்திற்கெதிராக ஆயுதப் போராட்டத்-தைத் தொடருவதா? அல்லது ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவிட்டு, இதுவரை போராட்டத்தில் பெற்ற வெற்றிகளையும், சாதனைகளையும் காப்பதற்காக, சட்டபூர்வமான கிளர்ச்சிகளையும் போராட்ட வழிகளையும் மேற்கொள்ளுவதா என்பது குறித்துக் கட்சிக்குள் பலத்த விவாதம் நடந்தது.

கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. அதேபோல்... விவசாயச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு,

www.tamilarangam.net



குத்தகைக் குறைப்பு, குடி உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகள் அமைக்கப்பட்டுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது, மாநிலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை கோருவது போன்ற விஷயங்களில் மக்களைத் திரட்டி கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றோடு நிறுத்திக் கொள்வதா என்பது குறித்தும் கூர்மையான விவாதங்கள் நடைபெற்றன.

இந்திய ராணுவத்தை எதிர்த்துப் போரிடுவது என்பது மிகவும் லகுவான காரியமல்ல; கடினமானதொன்று. மிக நவீன ஆயுதங்களைக் கொண்ட, நன்றாகப் பயிற்சியளிக்கப்பட்ட இந்திய ராணுவத்தோடு மோதுவதென்பது இதுவரை நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும்.

அது மட்டுமல்ல, விவசாய மக்களோடு சேர்ந்து நின்று நிஜாம் மன்னனை எதிர்த்த பணக்கார விவசாயிகள், சிறுமுதலாளிகள், மிதவாத நிலப்பிரபுக்கள் ஆகியோர் நேருவின் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் போகக் கூடிய நிலைமையும் நிச்சயமானதாக இருந்தது.

போராட்டத்தை நிபந்தனையின்றி வாபஸ் பெற்றால், கட்சி மற்றும் சங்க ஊழியர்கள் மீதும் விவசாயிகள் மீதும் தொடரப்பட்ட வழக்குகளை அரசாங்கம் திரும்பப் பெறுமா?

விவசாயிகளால் கைப்பற்றப்பட்டு விநியோகிப்பட்ட நிலங்களை அப்படியே விவசாயிகளிடம் விட்டு விடுமா என்பதெல்லாம் நிச்சயமாகத் தெரியவில்லை.

இத்தகைய ஒரு சூழலில்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆந்திர மாநில கமிட்டி நேருவின் ராணுவத்திற்கெதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வதென்று தீர்மானித்தது.

ராணுவத்தினரின் துணையுடன், இழந்த நிலங்களைக் கைப்பற்றத் துடிக்கும் நிலப்பிரபுக்கள், தேஷ்முக்குகளின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முயற்சிகளை முறியடிக்க வேண்டும்! இதுவரை ரத்தம் சிந்தி உயிர்பலிகொடுத்துப் போராடிப் பெற்ற உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்திடல் வேண்டும்! எனவே ஆயுதக் கிளர்ச்சியைத் தொடருதல் அவசியம்; இது தவிர்க்க முடியாதது என்று கட்சி முடிவு செய்தது.

"போராட்டத்தைத் தொடராமல் நிறுத்துவதென்பது, போரிடும் விவசாயிகளுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகமாகும்!

அது மட்டுமின்றி தெலுங்கானா மக்கள் இயக்கத்திற்குச் சொல்லொணாத் தீங்கை இழைக்கின்ற ஒரு செயலாகும்!" என்று கட்சி கருதியது.

எனவே ஆயுதப் போராட்டம் தொடர்ந்து.

விவசாயிகளுக்கெதிராக இந்திய ராணுவம் மூர்க்கத்-தனமான முறையைக் கையாண்டது.

1948 டிசம்பர் மாத அளவில்... தாக்குதல் பெருமளவு அதிகரித்தது.

அதுசமயம் கம்யூனிஸ்டு கட்சி ஒரு திட்டத்தை முன் வைத்து மக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

"பழைய போராட்டக் களங்களில் வென்றெடுத்த வெற்றிகளைக் கட்டிக்காப்பீர்! போராட்டவெற்றிகளைப் புதிய தளங்களுக்குக் கொண்டு செல்வீர்! எதிரியை ஒரே இடத்தில் நிலைத்திருக்கும்படி விடாதீர்! எதிரிகளின் தாக்குதலைக் கண்டு மனந்தளராதீர்!

எதிரி நிலத்தை எடுத்தால் அதன் பலனை அவன் அனுபவிக்க விடாதீர்! அந்நிலத்தில் விளையும் பயிரை அறுவடை செய்க! இல்லையேல் அதனை அழித்திடுக! கிராமங்களிலிருந்து எதிரியை விரட்டி நிலத்தைக் கைப்பற்றுங்கள்! அதனைப் பயன்படுத்துங்கள்! ஆனால் அதன் பலனை எதிரிகள் அனுபவிக்க எக்காரணம் கொண்டும் அனுமதிக்காதீர்!

www.tamilarangam.net



வரிவசூலிக்க வரும் அதிகாரிகளை விரட்டியடியங்கள், ஜமீன்தார்கள், தேஷ்முக்குகள், நிலப்பிரபுக்கள் இவர்களைக் கிராமத்தைவிட்டுத் துரத்தியடியுங்கள்!

எதிரிகளின் ஏஜெண்டுகளாகச் செயல்படும் ஆதிவாசி ஜாதித் தலைவர்களைத் துரத்தியடியுங்கள்! சாத்தியமான இடங்களில் நிலத்தைக் கைப்பற்றுங்கள்! அதனை ஏழை எளிய மக்களுக்கு முறையாகப் பகிர்ந்தளியுங்கள்!

விவசாயத் தொழிலாளர்கட்கும், பண்ணையாட்களுக்கும் கூலி உயர்வு, முறையான வேலை நேரம், குறைந்தபட்ச விடுமுறை நாட்கள் இவற்றிற்காகப் போராட்டங்களை நடத்திடுவீர்! பஞ்சாயத்து நிர்ணயிப்பதைவிட அதிக வட்டி விகிதத்தை அனுமதிக்காதீர்!"

இவ்வாறு பல திட்டங்களைச் செயல்படுத்தும் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சி மக்களைத் திரட்டியது.

மேலும், விவசாயத் தொழிலாளர்கள் அவர்களுடைய ஸ்தாபனங்களில் திரட்டப்படல் வேண்டும், கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்ட வேண்டும்,

இதன் மூலம்தான் எதிர்த்தாக்குதலைத் தொடுக்கும் ஒரு வலுமிக்க படையை உருவாக்க முடியும் என்று கட்சி கருதியது.

1948 செப்டம்பர் 13 ஆம் தேதியன்று...உள்ளே நுழைந்த ராணுவம், மெதுவாக... முன்னேறி...விவசாய மக்களால் விடுதலை செய்யப்பட்ட கரீம்நகர், வாரங்கல், கம்மம் பகுதிகளில் கொடூரமான தாக்குதலைத் தொடுக்கத் துவங்கியது.

கம்யூனிஸ்டுகள், ஆந்திர மகாசபையினர், விவசாயச் சங்கத்தினர், நிலப்பிரபுக்களின் நிலத்தைப் பறித்து... அதிலே உழைத்துக் கொண்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள், கொரில்லாப் போர்வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிராமவாசிகள், இவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்திய ராணுவம் இத்தகைய அட்டூழியங்களைப் புரிந்து கொண்டிருந்தபோது, வெளியுலகுக்குச் சொல்லப்-பட்ட சேதி என்ன தெரியுமா?

"இது நிஜாம் மன்னனுக்கெதிரான போலீஸ் நடவடிக்கை! ஹைதராபாத் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கை!" என்பதுதான்.

இப்படிச் சொன்ன இந்திய அரசு, இந்திய ராணுவத்தின் மிகச்சிறந்த ஒரு பகுதியைத்தான் ஹைதராபாத்துக்கு அனுப்பியிருந்தது.

அப்போது உள்துறை அமைச்சராயிருந்த வல்லபாய் பட்டேல், "கம்யூனிஸ்டுகள், தெலுங்கானாவில் இரு மாவட்டங்களில் ஆட்சி நடத்துகிறார்கள். அதனால்தான் இந்த போலீஸ் நடவடிக்கை!" என்று கடைசியில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

இந்த வல்லபாய் பட்டேல் யார் தெரியுமா?

பாகிஸ்தான் பிரிந்தபோது, டில்லியில் உள்ள முஸ்லீம்களை விரட்டியடிப்பதற்கு முன்னணியில் நின்றவர். டில்லியில் உள்ள முஸ்லீம்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குத் திட்டமிட்டுச் செயல்ப்பட்டவர். இவருக்கு 'இரும்பு மனிதர்' என்ற பட்டம் வேறு எதற்காகவும் கிடைக்கவில்லை, இத்தகைய அட்டூழியங்களை ஈவு இரக்கமின்றி வழி நடத்தியதற்காகத்தான் கிடைத்தது.

அப்போதைய கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் இதையேதான் சொன்னார்.

"தெலுங்கானா பகுதியில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்-தைத் துடைத்தெறிய வேண்டும்! அதற்காகத்தான் இந்த நடவடிக்கை!" என்று.

www.tamilarangam.net



இந்த ராணுவ நடவடிக்கைகளை... 'கண்ட்ரோல்' செய்வதற்காக வெல்லோடி எனும் நரிக்குணம் படைத்த ஐ.சி.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தான்.

ஜெனரல் சௌத்திரி, இந்திய ராணுவத்திற்குத் தலைமையேற்று வழிநடத்தினான்.

இவர்கள் ரஜாக்கர்களையும் சிறைப்பிடித்தார்கள். ஆனால் அவர்கள் மீது எந்த வழக்கையும் பதிவு செய்ய-வில்லை, தண்டிக்கவுமில்லை. மாறாக 1950 ஆம் ஆண்டு இந்தியா குடியரசாக அறிவிக்கப்பட்டபோது, ஹைதராபாத் நிஜாம், இந்திய அரசால் ராஜப் பிரமுகராகப் பிரகடனம் செய்யப்படுகிறான்.

ரஜாக்கர்களின் தலைவர் 'காசிம் ரஸ்லிக்கு' முதல் வகுப்பு சிறைச்சாலை ஒதுக்கப்பட்டு, அவனுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டன.

இந்திய ராணுவத்தின் மிருகத்தனமான தாக்குதலில்... கம்யூனிஸ்டுகளும் விவசாயிகளும், கிராமவாசிகளும், பெண்களும்...ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

இதன் ஒரு கட்டத்தில்தான்...

காங்கிரஸாரிடத்தில் செல்வாக்குப் பெற்ற மக்களால் மதிக்கப்பெற்ற டாக்டர் ஜெயசூரியா என்ற நடுநிலையாளர்,

"ராணுவத்தின் மிருகவெறித் தாக்குதலை நிறுத்துங்கள்! நான் கம்யூனிஸ்டுகளிடம் சென்று பேசி, அவர்களைச் சமரசத்திற்கு இணங்க வைக்கிறேன்!" என்று இந்திய அரசிடம் முறையிட்டார்.

அதற்கு ஜெனரல் சௌத்ரி,

"முடியாது; இன்னும் ஆறு வாரக் காலத்துக்குள் கம்யூனிஸ்டுகள் அனைவரும் சரணடைய வேண்டும். இல்லையேல் ஹைதராபாத் மாநிலத்திலுள்ள ஒரு கம்யூனிஸ்டைக் கூட விடமாட்டேன்! அனைவரையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூண்டோடு ஒழித்துக்கட்டுவேன்; இது உறுதி" என்று கொக்கரித்தான்.

ஜெனரல் சௌத்ரியும், வெல்லோடியும் புரிந்த ராணுவக் கொடுமைகள் எத்தகையது தெரியுமா?

முதலில் ராணுவம், ஐந்தாறு கிராமங்களைத் தேர்ந்தெடுக்கும். பின்னர், கிராமங்கள் சுற்றி வளைக்கப்-பட்டுத் தாக்குதல் வளையம் அமைக்கப்படும். தாக்குதல் வளைத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கிக் கொண்டேவந்து, இறுதியில் கிராமங்களில் நுழைந்து, அனைத்து மக்களையும் கைது செய்யும். அவர்களை ஒரு பொது இடத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தும். வீடுகள் காலியானதற்குப் பிறகு, வீடுகளைச் சோதனையிடுவது, எங்காவது குழியிலோ, கிணற்றிலோ ஒளிந்து கொண்டிருக்-கிறார்களா என்று தேடிப்பார்ப்பது; யாராவது சிக்கினால் அவர்களைக் கட்டி இழுத்துவந்து பொது இடத்தில் நிறுத்துவது; இவ்வாறு சிறை செய்யப்பட்ட அனைவரையும் ஆண், பெண் என்ற பாராமல் நிர்வாணமாக்கி...ஆடு மாடுகளைப் போல் அடித்து ஒட்டிவந்து, பொது இடத்தில் நிறுத்தி வைப்பது...

பிறகு-

அவர்களில் யார் கம்யூனிஸ்டுகள்? யார் விவசாயச்சங்க ஊழியர்கள்? யார் யாரெல்லாம் நிலப்பிரபுகளுக்கும், ஜமீன்தார்களுக்கும் எதிராகச் செயல்பட்டார்கள் என்பதைக் கண்டுபிடித்துப் பொதுமக்கள் பார்க்கும்படி அவர்களை அணுஅணுவாகச் சித்திரவதை செய்து கொன்றுவிடுவது.

அங்கே வயோதிகர்கள் நின்று கொண்டிருப்பார்கள். பெண்கள் நின்றுகொண்டிருப்பார்கள். குழந்தைகள் நின்று கொண்டிருப்பார்கள். அவர்களின் முன்னாலேயே கைது செய்யப்பட்ட ஒருவனைக் கொண்டு வருவார்கள்.

அவனைக் கோணிப் பையில் வைத்து உடன் ஒரு

www.tamilarangam.net



பெரியகல்லையும் வைத்து மூட்டையாகக் கட்டுவார்கள். மரக்கிளையின் உச்சியிலே ராட்டினத்தைக் கட்டி, தண்ணீர் இறைக்கிற மாதிரி அம்மூட்டையை 30, 40 அடி உயரத்துக்கு மேலே இழுப்பார்கள். பிறகு திடீரெனக் கயிற்றை விட்டுவிடுவார்கள். மூட்டையாகக் கட்டப்பட்டவன் 'சொத்'தென்று கீழே விழுந்து சின்னா பின்னமாகிப் போவான்.

இதைப்பார்த்து ராணுவத்தினர் கைகொட்டிச் சிரிப்பார்கள். "இந்திய ராணுவத்தை இப்போதாவது புரிகிறதா?" என வெறிக் கூச்சலிடுவார்கள். இவையத்தனையும் கிராம மக்களின் கண் முன்னால்தான் நடைபெறும்.

இதற்குமேல் மக்களை நிர்வாணமாக்கிக் கொளுத்தும் வெயிலில் படுக்க வைப்பது, புளியமரத்து விளார்களால் அவர்களை அடிப்பது, அவர்கள் மேலே குதிரைகளை ஓட விடுவது, நகக் கண்களிலே ஊசியைச் செருகுவது, மூன்று நான்கு பேர்களை ஒன்றாகச் சேர்த்து அவர்களின் கைகளையும் கால்களையும் ஒன்றாகக் கயிற்றினால் கட்டிக் கயிற்றின் மறுமுனையை லாரிகள், மாட்டு வண்டிகள் இவற்றின் பின்னால் கட்டி வண்டியை வேகமாக ஓடவிடுவது, இரும்புக் கம்பியைக் காய்ச்சிப் பழுக்க வைத்து மர்ம ஸ்தானங்களிலே சூடு வைப்பது, இவற்றையெல்லாம் கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றிச் செய்து வந்தனர்.

காட்டுமிராண்டிகளான ரஜாக்கர்கள் புரிந்த கொடுமைகளையெல்லாம் மிஞ்சுகிற படுபாதகச் செயல்களை இந்திய ராணுவம் உற்சாகத்தோடு செய்து வந்தது.

தெலுங்கானா போராட்டத்தில் பெண்களின் பங்கு என்பது மகத்தானது. இதை நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். இதற்கு முன்பே தேசிய இயக்கத்தில் பல போராட்டங்களில் பெண்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

காந்தியடிகள் நடத்திய சத்தியாக்கிரகத்திலே பல பெண்கள் கலந்துகொண்டு சிறைசென்றதும் உண்டு. அது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களை முழு நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் சென்ற செயலைக் கண்டித்து, காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் வெளியிட்ட அறிக்கையும், இந்தக் கொடுமைகளைப் பகிரங்கமாகக் கண்டித்து காங்கிரஸ் ஆதரவு பெற்ற பத்திரிகையொன்று எழுதிய தலையங்கமும் இக்கொடூரமான நிகழ்ச்சிகளைச் சரித்திரத்தில் கறுப்பு எழுத்துக்களால் பதிவு செய்தன.

இவ்வளவு கொடுமைகளையும் தெலிங்கானா மக்கள் தாங்கினார்கள். இத்தகைய கொடுமைகளைப் புரிந்தும் ராணுவத்தால் அவர்களின் போராட்டத்தைத் தடுக்க முடியவில்லை. கொரில்லாக்களின் போராட்டம் தொடர்ந்து நடந்தது.

இந்திய ராணுவத்திடம் எல்லா வகையான நவீன ஆயுதங்களும் இருந்தன; டாங்கிகள் உள்பட. ஆனால் நமது போர் வீரர்களுக்கோ அத்தகைய நவீன ஆயுதங்கள் எதுவுமில்லை. இருப்பினும் அவர்கள் தீரத்தோடு போரிட்டனர்.

இந்திய ராணுவம்-

ஐந்து மைல்களுக்கு ஒரு ராணுவ முகாம் அமைத்தது. இம்முகாம்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் தினமும் இருமுறை மும்முறை கொடூரமான தாக்குதலைத் தொடுக்க ஆரம்பித்தது.

இப்போராட்டக் காலத்தில்-

நலகொண்டா, வாரங்கல், கம்மம், கரீம் நகர், ஹைதராபாத் மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்-துக்கும் மேற்பட்ட கிராமங்களில் மூன்று லட்சம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர். இரண்டு லட்சம் பேர் கைது செய்யப்பட்டு மாதக்கணக்கில் காவலில் வைக்கப்பட்டனர். ஐந்தாயிரம் பேர் வருடக் கணக்கில் சிறையில் அடைக்-

www.tamilarangam.net



கப்பட்டனர். ஆயிரக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். கும்பல் கற்பழிப்பினால் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கொல்லப்பட்டனர்.

கட்சியும் ஆந்திர மகாசபையும் எண்ணற்ற உயிர்களைத் தத்தம் செய்தன. ஏராளமான தலைவர்கள் போராட்டக் களத்திலேயே கொல்லப்பட்டனர்.

ராணுவத்தினரின் சித்திரவதைக் கொடுமைகளால் மட்டும் நான்காயிரம் பேருக்குமேல் கொல்லப்பட்டனர்.

இச்சமயத்தில் கோதாவரி மாவட்டத்திலுள்ள கோயாமலைஜாதி மக்கள் வசிக்கும் பகுதியில் காலரா பரவியது. ராணுவ முற்றுகை வெளித் தொடர்புகள் அறுபட்டன; இவற்றின் காரணமாகச் சரியான சிகிச்சை மற்றும் மருந்துகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் கிட்டத்தட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கோயா இனத்தவர் காலரா நோயால் மடிந்தனர்.

‘கடபாடு’ எனுமிடத்தில் முகாமில் வைக்கப்பட்டிருந்த 1500 கோயா மலை ஜாதி மக்களும், நோய் கண்டு மடிந்தனர்.

போலீஸ் ராணுவத் தாக்குதலால் மட்டும் முந்நூறுக்கும் மேற்பட்ட மலைஜாதி மக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வளவு இழப்பிற்குப் பின்னரும் 1947-50 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணற்ற வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் நடைபெற்றன.

கிருஷ்ணா காட்டுப் பகுதியிலும் கோதாவரி காட்டுப் பகுதியிலும், அமராபாத் பகுதியிலும் போராட்டம் பன்மடங்கு விஸ்தரிக்கப்பட்டது.

உண்மையில்...தெலிங்கானா மக்கள் போராட்டம், ஹைதராபாத் இந்தியாவில் இணைக்கப்படும் வரைதான், நிஜாம் அரசுக்கு எதிரான ஒரு போராட்டமாக இருந்தது.

www.tamilarangam.net



பிறகு அந்தப் போராட்டத்தின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டது.

நிஜாம் மன்னரோடும், நிலப்பிரபுக்களோடும் உறுதியாகப் போராடி ரத்தம் சிந்திப் பெற்ற உரிமைகளை இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் போராட்டமாக அது மாறியது. உழுபவனுக்கு நஷ்டஈடு இன்றி வழங்கப்பட்ட நிலத்தைப் பறிமுதல் செய்து, நிலப் பிரபுக்களுக்கு மீண்டும் நிலம் வழங்க முயலும் இந்திய அரசுக்கு எதிரான போராட்டமாக அது மாறியது.

ஆனால் தெலிங்கானா மக்கள் போராட்டத்தின் இந்தத் தார்மீக நியாயங்களை, இப்போராட்டத்தின் சாராம்சத்தை, இந்தியாவின் அனைத்துப்பகுதி மக்களிடத்திலும் எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்போ வசதியோ அன்று, தெலிங்கானா மக்கள் இயக்கத்திற்கோ, கம்யூனிஸ்டுகளுக்கோ கிட்ட-வில்லை.

ஏனெனில் அதற்கான சமூக அஸ்திவாரம் இல்லை.

தெலிங்கானாவில் நடக்கிற மகத்தான உயிர்த்தி-யாகங்கள், இந்தியாவின் பெரும்பான்மையான மக்களுக்கு ஒரு செய்தியாகக்கூடப் போய்ச் சேரவில்லை.

1948 ஜனவரியில் இந்தியா முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் சார்பு அமைப்புகளும் தடை செய்யப்பட்டுப் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

பத்திரிகைகள், தகவல் தொடர்பு, மற்றும் வானொலி போன்ற வலுமிக்க சாதனங்கள் அரசிடத்திலும், ஆள்வோரின் செல்வாக்கின் கீழும் இருந்து வந்தன.

அவர்களுடைய கருத்துக்கள், அவர்களுடைய பார்வைகள் இவைதான் மக்கள் மத்தியில் சென்றடைந்தன. ஹைதராபாத் தொழில் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்த பகுதி அல்ல. ஆகவே வலிமையான தொழிற் சங்க இயக்கம் இல்லை. விவசாயிகளுக்கு எதிரான தாக்குதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்த்து உறுதியான ஆர்ப்பாட்டங்களும் வலிமை மிக்க பொது வேலை நிறுத்தங்களும் ஐதராபாத்தில் நடைபெற-வில்லை. அனைத்து இந்திய அடிப்படையிலே தெலிங்கானா போராட்டத்திற்கு ஆதரவாகத் தொழிலாளர் போராட்டங்-களோ தேசிய வேலை நிறுத்தங்களோ நடத்த முடியவில்லை.

ஏனெனில் தொழிலாளர்கள் அரசு யந்திரத்திற்குச் சவால் விடக்கூடிய ஒரு வலுமிக்க வர்க்க ஸ்தாபனமாகத் திரட்டப் பட்டிருக்கவில்லை.

அதுமட்டுமின்றி, புதிதாகப் பெற்ற சுதந்திரமும், சுதந்திர இந்தியாவின் அரசும் மக்களிடத்திலே அதிக எதிர்ப்பார்ப்பு-களையும், நம்பிக்கையையும் தோற்றுவித்திருந்த சமயம் அது.

இது ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் அம்சமாக அன்று விளங்கியது.

ஆள்வோரின் வர்க்கச் சேர்க்கையிலே, வர்க்கச் சேர்மானத்திலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இது போன்ற பல காரணங்கள் தெலிங்கானா போராட்டம் தொடர்வதற்கான சாத்தியப்பாடுகளைப் பலவீனப்படுத்தின.

இறுதியில் கடுமையான விவாதத்திற்குப் பின்னர், 1951, அக்டோபரில் போராட்டத்தை நிறுத்துவதென்று கட்சி முடிவு செய்தது.

இதற்குக் கட்சியில் எதிர்ப்பும் இருந்தது. இதற்கு முன்பே அறிவித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் இருந்தது.

www.tamilarangam.net

# படிப்பினைகள்

இந்திய ராணுவம் ஹைதராபாத்தில் நுழைந்ததைத் தொடர்ந்து அங்கு நிலவிய அரசியல் நிலைமையிலும் சில மாற்றங்கள் தோன்றின. அதுவரை நிஜாமின் கொடிய மன்னராட்சிக்கு எதிராகவும், நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டம் இந்திய அரசையும், அதன் இராணுவத்தையும் எதிர்த்த போராட்டமாகக் பரிணமித்தது.

இந்தப் புதிய சூழ்நிலையில், ஆயுதப் போராட்டத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று சிலர் கம்யூனிஸ்ட் கட்சியில் வாதாடினர். இப்போராட்டம் நேரு ஆட்சியை அகற்ற நடத்தப்படும் விடுதலைப் போராட்டம் என்ற கூற்று தவறானதுதான்; இருப்பினும் தேஷ்முக்குகளிடமிருந்தும், நிஜாம் மன்னரிடமிருந்தும் கைப்பற்றி, நஷ்டஈடுஇன்றி விநியோகம்செய்த நிலங்களை இந்திய இராணுவம் கைப்பற்றி, மீண்டும் நிலப்பிரபுக்களுக்கு விநியோகம் செய்யும் நிகழ்ச்சியைத் தடுக்க ஆயுதப் போர் நடத்தியது தவிர்க்க முடியாததே. இந்தியாவின் விடுதலைக்கோ, புரட்சியை விஸ்தரிப்பதற்கோ அன்றி, பெற்ற உரிமைகளைப் பாதுகாக்க இப்போராட்டம் தேவைப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தெலிங்கானா போராட்டம் 1951 அக்டோபர் 21 ஆம் தேதியன்று வாபஸ் பெறப்பட்டது.

பலவிதமான வாதப் பிரதிவாதங்களுக்கு இடையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி இம்முடிவை எடுத்திருந்தது. கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றின் மிகச் சிரமமான காலம் அது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு தீவிரமான போராட்டங்கள் ஏராளம். தீர்க்கப்படாத

www.tamilarangam.net



விவசாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கோரி நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன.

மஹாராஷ்டிராவில் 'வோர்லி' மலை ஜாதியினர் நடத்திய மாபெரும் போராட்டம் வங்காளத்தில் நடைபெற்ற குத்தகையில் மூன்றில் இரண்டு பங்கு கோரும் 'தேபாகா' (மூன்றில் இரண்டு பங்கு) இயக்கம், திரிபுரா மலை ஜாதி மக்களின் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சி, புன்னப் புரா-வயலாரில் ஏற்பட்ட ராணுவத்திற்கெதிரான ஆயுதமேந்திய பேரெழுச்சி, இதற்கு ஆதரவாக நடைபெற்ற தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், வடக்கு மலபார் பகுதியில் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் நெல்லைப் பறிமுதல் செய்து விநியோகம் செய்த மாபெரும் கிளர்ச்சி... இத்தகைய எழுச்சிகளின் தொடர்ச்சிதான் ஹைதராபாத் மன்னனுக்கெதிராகத் தெலிங்கானா மக்கள் நடத்திய தீரஞ் செறிந்த போராட்டம்.

1946 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1951 அக்டோபர் வரை நடைபெற்ற இப்போராட்டங்களின் பல கட்டங்களில்...கடைப்பிடிக்கவேண்டிய போராட்ட முறைகள் பற்றி, தந்திரங்கள் பற்றிப் பல கருத்து மோதல்கள் கட்சிக்குள் உண்டாயின. பல சர்ச்சைகள் ஏற்பட்டன. தவறான பல கருத்துக்களும் கட்சிக்குள் நுழையலாயின.

1948-இல் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் இரண்டாவது மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது.

'தெலுங்கானா வழியே எங்கள் வழி!' என்ற கோஷங்கள் அம்மாநாட்டில் எழுப்பப்பட்டன. இருப்பினும் இந்தியப் பொருளாதார அமைப்பின் பின் தங்கிய நிலை குறித்துச் சரியான பார்வையை அம் மாநாடு பெறவில்லை.

சீனா போன்ற காலனி நாடுகளின் புரட்சிகர இயக்க அனுபவங்களைக் குறைத்து மதிப்பிடும் போக்கே மேலோங்கி நின்றது. விவசாயிகளின் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிட்டு நகர்ப்புறங்களில் பொது வேலை நிறுத்தங்கள் நடத்துவதே போதுமானது, இதுவே புரட்சிகரமான நடைமுறை என்றெல்லாம் பேசப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியின் ஆயுதம் என்பது தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்தான். இதுவே சாலச் சிறந்தது; சரியான வழியும் கூட அதுபோன்ற பொது வேலை நிறுத்தங்கள் மூலம் நாடு தழுவிய ஆயுதப் போராட்டங்களை உருவாக்க முடியும்! இந்திய அரசையே தூக்கி எறிய முடியும்!- எனும் இந்தக் கருத்துக்கள் மேலோங்கி நின்றன.

இவர்கள், தங்கள் தவறான அரசியல் கூற்றுக்கு 'ரஷ்யப்பாதை' என்று இலங்கணங் கூறினர்.

இதை மறுத்தவர்கள், சீனப் புரட்சியின் உள்ளடக்கத்-தைத் தவறாகப் புரிந்து கொண்டு 'சீனாவின் வழியே, நமது வழி!' என்று கோஷமெழுப்பினர்.

'கிராமங்களில் துவக்கப்படும் கொரில்லாப் போராட்-டங்கள் விரிவடைந்து நகரங்களைக் கைப்பற்றும்! வெற்றி வாகை சூடும்! இதுவே புரட்சிக்கான வழி!' என்று தங்களது பாதைக்கு இலக்கணங் கூறினர். தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் பொது வேலை நிறுத்தத்தின் பங்கையும் அறவே மறுத்தனர்.

முதல் சாரார், விவசாயப் புரட்சியின் முக்கியத்துவத்தை மறந்தனர். இரண்டாவது சாரார் தொழிலாளர்களின் பங்கையும் இந்தியாவின் தனிச் சிறப்புக்களையும் காண மறுத்தனர்.

கிராமப் புறத்து விவசாயிகள், நகர்ப்புறத்துத் தொழிலாளர்கள்-இவர்களுக்கு இடையே உருவாக்க வேண்டிய பரந்துபட்ட ஒற்றுமையையும், அதனடிப்-படையில் உருவாகும் நாடு தழுவிய மக்கள் அணியையும் இரு சாராரும் கணக்கில் எடுக்கவில்லை.

அதுமட்டுமின்றி, ரஷ்யப்புரட்சியும், சீனப்புரட்சியும் உருவெடுத்த சிறப்புச் சூழல்களையும், அந்நாடுகளின் பிரதான நிலைமைகளையும் பார்க்க மறுத்தனர்.

வெறுமனே சீனப்பாதையென்றும் ரஷ்யப்பாதை-யென்றும் வறட்டுத்தனமாகப் பிதற்றித் திரிந்தனர்.

இந்தியா, அடிப்படையிலே ஒரு பின் தங்கிய நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏறத்தாழ எண்பது சதவீத இந்திய மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர்.

இந்தச் சூழ்நிலைகள்தான் புரட்சிகரமான ஒரு இயக்கத்திற்கு, விவசாயப் பிரச்னைகளைத் தீர்த்தாகவேண்டிய கட்டாயத்தை உண்டு பண்ணுகின்றன.

அதனால்தான், விவசாயப்புரட்சி என்பதும், விவசாயிகளின் ஆயுதந்தாங்கிய கொரில்லாப் போராட்டம் என்பதும் இங்கு தவிர்க்க முடியாமல் போகிறது.

ஆனால் இத்தகைய கொரில்லாப் போராட்டங்கள் மட்டுமே, புரட்சியின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்க முடியுமா?

நிச்சயமாக முடியாது!

தெலுங்கானா நமக்கு அளிக்கிற படிப்பினையும் இதுதான்.

பீறிட்டுக் கிளம்பிய, விவசாயிகளின் ஆயுதப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க அரசாங்கம் தனது சகல பரிவாரங்களோடும் களத்தில் இறங்கியது. அப்போது என்ன நடந்திருக்க வேண்டும்?

ரயில் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, கேந்திரமான தொழில்கள், பெருந் தொழிற்சாலைகள் இவற்றில் பணியாற்றுகிற தொழிலா-ளர்கள் களத்தில் இறங்கி, ஆயுதம் தாங்கிய விவசாயப் புரட்சிக்குப் பக்க பலமாக நின்றிருந்தால்...

நாடு தழுவிய பொது வேலை நிறுத்தங்கள் செய்து அரசின் நடவடிக்கையை முறியடித்திருந்தால்...

என்ன நிகழ்ந்திருக்கும்?

தெலுங்கானா போராட்டம் இந்தியாவில் எவ்வளவு பெரிய சமுதாய வீச்சை உருவாக்கியிருக்கும்...?

இந்தப் பேருண்மைகளையெல்லாம் தெலுங்கானா போராட்டம்தான் நிதர்சனமாக்கி நம் கண்முன் நிறுத்தியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவில் சமுதாயப் புரட்சியை நடத்த விரும்புவோருக்கு ஒரு படிப்பினையாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய இப்போராட்டம் வெறும் மூன்று மாவட்டங்களில் எழுந்த எழுச்சிப் புயல்தான்.

அப்போது, இந்தியா முழுதும் உள்ள விவசாயிகள் புரட்சிப் பாதைக்கு வரவில்லை. அனைத்திந்திய ஆதரவு இயக்கங்களும் குறிப்பிட்ட அளவுக்குத் தோன்றாதநேரம், வேலை நிறுத்தங்கள் மூலம் தொழிலாளி வர்க்கம் நேரடியாக உதவி செய்ய முன் வராத ஒரு கட்டம், அனைத்திந்தியாவிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிலாளிவர்க்க இயக்கமும் பலமிக்க அமைப்பாக இல்லாத ஒரு நிலை. இத்தகைய சூழலில்தான் தெலுங்கானா போராட்டத்தைத் தொடர்வது சாத்தியமல்ல, விவேகமுமல்ல என்று கருதப்பட்டது.

இறுதியில் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

எனினும் தியாகத்திற்கும் உறுதிக்கும் ஒரு புதிய அத்தியாயத்தைத் தெலுங்கானா போராட்டம் எழுதிச் சேர்த்தது.

இதற்கு முன் இந்தியாவில் எத்தனையோ ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகள் நடந்ததுண்டு.

சாதாரண மக்களும் ராணுவத்தினரும் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

1857இல் நடைபெற்ற இந்தியச் சுதந்திரப் போராட்டம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். அந்நியர் ஆட்சியை அகற்றும்உத்வேகம் அப்போராட்டத்தில் கலந்துகொண்ட ராணுவத்தினரையும், மக்களையும் ஊக்குவித்தது.

ஆனால் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் அனேகமாக, நிலப்பிரபுக்களாக இருந்தனர், அல்லது முடியிழந்த மன்னர்களாக இருந்தனர்.

இப்போராட்டங்கள்... இழந்த அதிகாரத்தைக்

www.tamilarangam.net



கைப்பற்றுவதற்காகவும் ஒரு மன்னனை அகற்றி இன்னொரு மன்னனை ஆட்சியில் அமர்த்துவதற்காகவும் நடைபெற்ற போராட்டங்களாகத்தான் இருந்தன.

மதச் சிந்தனையுடையவர்களின் தலைமையிலேயும் போராட்டம் நடந்ததுண்டு. நிலப்பிரபுத்துவக் கொடுமை-களை எதிர்த்து மனிதாபிமானமிக்கவர்களின் தலைமை-யிலேயும் போராட்டங்கள் நடந்ததுண்டு. தேசிய இயக்கத்தின் முன்னேற்றத்தையொட்டி, விவசாயிகளின் வரிகொடா இயக்கங்களும் போராட்டங்களும் நடைபெற்றதுண்டு.

ஆனால், தெலுங்கானா போராட்டம் ஒரு தனி ரகம்; இவற்றில் எதனோடும் ஒப்பிட முடியாதது.

1921-இல் மலபாரில் முஸ்லீம் விவசாயிகள் ஆயுத மேந்திப் போராடினார்கள். நிலங்களைப் பறிமுதல் செய்தார்கள். கிராமங்களைக் கைப்பற்றினார்கள். நில ஆவணங்களனைத்தும் தீக்கிரையாகியபோது நில உடைமை ஏழைகளின் கையில் கிடைத்து விட்டது என்று அவர்கள் தப்புக் கணக்குப் போட்டார்கள்.

கிராம அதிகாரிகளை அழைத்து "இது நாள் வரை நீ பிரிட்டிஷாருக்காக ஊழியம் செய்தாய்! இனி எங்களுக்காக ஊழியம் செய்! எங்களுக்காகக் கிராமங்களை நிர்வகித்து வா" என்று அவர்களிடத்திலேயே நிர்வாகத்தை ஒப்படைத்தனர்.

எந்த அதிகாரிகள் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருந்தார்களோ, அதே அதிகாரிகளைத்தான் விவசாயிகளும் நம்ப வேண்டியிருந்தது.

ஆனால் தெலுங்கானா அப்படியல்ல.

3000 கிராமங்களைக் கைப்பற்றி... தனி அரசு அமைத்து அவர்களே ஆட்சி நடத்தினர். பத்து லட்சம் ஏக்கர் நிலங்களைப் பறிமுதல் செய்து, நஷ்ட ஈடின்றி விநியோகம் செய்தனர்.

நீதி, நிர்வாகம், போலீஸ், நில விநியோகம் இவை-யனைத்தும் ஸ்தலக் குழுக்களால் செம்மையாக நடத்தப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டன. இந்திய வரலாற்றிலே இது ஒரு புதிய பாதையைக் காட்டியது.

கூலிகள், பஞ்சைகள், பராரிகள், உழைப்பதற்கும் சேவகம் செய்வதற்குமே பிறந்தவர்கள், இவர்களால் நிர்வாகம் செய்ய முடியுமா - என்ற கேள்விக்கு 'முடியும்' என்று தெலுங்கானா பதிலிறுத்தது.

தரித்திர நாராயணர்கள் தரணியாள முடியும் என்பதற்குத் தெலுங்கானா ஒரு ஜீவனுள்ள உதாரணம்.

இந்திய ராணுவத்தின் வலுவான பகுதியை 50000 பேர் கொண்ட ஒரு மிகப் பெரிய ராணுவத்தைக் கிட்டத் தட்ட மூன்றாண்டுக் காலம் அலைக்கழித்துத் திணறடித்த வல்லமை தெலுங்கானா மக்கள் இயக்கத்திற்கு இருந்தது.

கொரில்லாப் போராட்டத்தில் சிறப்புமிக்க அத்தியாயத்தை. உருவாக்கியது தெலுங்கானா போராட்டம் தான்.

நவீன ஆயுதங்களோடு களத்தில் இறங்கிய ராணுவத்தை கொரில்லாக்களால் சமாளிக்க முடியுமா என்ற கேள்விக்கு, இப்போராட்டம் 'ஆம்! முடியும்!' என்று தெளிவாக விடையளித்தது. நிலம் கைப்பற்றப்படும்போது, தனிச் சொத்துரிமை அழித்தொழிக்கப்படும்போது - அரசும், அரசு இயந்திரமும் கை கட்டிக் கொண்டு சும்மா நிற்குமா?

4000-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரக்கணக்கானோர் ராணுவ முகாமில் கொடூரமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். கற்பழிப்பு, வீடுகளுக்கு தீ வைப்பு இவை கணக்கின்றி நடந்தன.

இத்தனை தாக்குதலையும் இந்திய ராணுவமும், போலீஸும்தான் முன் நின்று நடத்தின.

சட்டமும், நீதியும் இக்கொலை பாதகங்களை நியாயப்படுத்தின.

"அரசும், அரசினது ராணுவமும், போலீஸும், நீதி மன்றங்களும், சட்டமும் இவையனைத்துமே உடைமை-

www.tamilarangam.net



வர்க்கத்தின் உரிமைகளைக் காக்கும் வன்முறைக் கருவிகள்!" என்று காரல் மார்க்ஸ் கூறினார். இந்தப் பேருண்மையை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியது தெலுங்கானா போராட்டம்தான்.

1952-க்குப் பிறகு ஹைதராபாத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற தாக்கத்தை இந்திய அரசியலில் உருவாக்கியது தெலுங்கானா போராட்டம்தான்.

இந்தப் போராட்டம் முடிந்த பிறகு இந்திய அரசியலில் புறக்கணிக்கமுடியாத ஒரு அரசியல் சக்தியாகக் கம்யூனிஸ்ட் கட்சி விளக்கியது. முதல் பொதுத் தேர்தலில் பாராளு-மன்றத்தில் முதல் எதிர்க்கட்சியாகக் கம்யூனிஸ்ட் கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆந்திரா தெலுங்கானா பகுதியில் 19 பாராளுமன்றத் தொகுதியிலேயும் 80 சட்டமன்றத் தொகுதியிலேயும் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர். பழைய சென்னை மாகாணத்தில் கம்யூனிஸ்டுகளும் அவர்களது ஐக்கிய ஜனநாயக முன்னணியும் சேர்ந்து பெரும்பான்மை பலத்தைப் பெற்றன.

தெலுங்கானா இயக்கத்தைப் போல அவதூறுக்கும் தூற்றுதலுக்கும் ஆளான இயக்கம் வரலாற்றில் வேறெதுவும் இருக்க முடியாது.

அராஜகம், வன்முறை, கொள்ளை என்றெல்லாம் இயக்கம் தூற்றப்பட்டது. நாடெங்கிலும் போராட்டத்திற்கு மாசு கற்பிக்கும் · பிரச்சாரங்கள் வெகு வேகமாக நடைபெற்றன.

எனினும், விவசாயிகள் பிரச்னை எப்படித் தீர்க்கப்பட-வேண்டும், நில விநியோகம் எப்படி நடைபெறவேண்டும் என்பதையெல்லாம் தெலுங்கானா போராட்டம் தான் இந்திய வரலாற்றில் முதல் முறையாக முன்னுக்குக் கொண்டு வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இயக்கத்தின் வேகத்தைத் தணிய வைப்பதற்காகத்தான் வினோபாபாவே தெலிங்கானா பகுதிக்குச் சென்று பூதான இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

நிலத்தைக் கைப்பற்றி விநியோகம் செய்யத் தேவையில்லை. நிலப்பிரபுக்களின் மனத்தை மாற்றி அதன் மூலம் ஏராளமான நிலத்தைத் தானமாகப் பெறமுடியும். நிலமற்றவர்களுக்கு இந்நிலங்களை வழங்கி நிலப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாம் என்று ஒரு முனிவர் உருவில் கிராமங்களில் வலம் வந்தார் வினோபா.

ஒரு புறத்தில் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஜனநாயகமுறைப்படி நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தியாவின் நிலப்பிரச்னையைத் தீர்க்கலாம் என்று கோஷித்தனர்.

இவ்விரு கோஷங்களையும் அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், வானளாவப் பிரச்சாரம் செய்தன. உண்மையில், இவ்விரு கோஷங்களும் நிலப்பிரச்னையைத் தீர்க்க எவ்விதத்திலும் பயனளிக்கவில்லை.

இதுதான் இந்தியாவில் நாம் கண்ட கசப்பான அனுபவம்.

பூதானம் செத்துவிட்டது. நிலப்பிரபுக்களின் மனம் மாறவில்லை.

உச்சவரம்புச் சட்டங்களும் நிலப்பிரச்னைக்குத் தீர்வு காணவில்லை.

கோடிக்கணக்கானவர்களுக்கு நிலமில்லை. அவர்கள் நித்தம் நித்தம் நிலப் பசியெனும் நெருப்பில் கருகி வருகின்றனர். உழுவதற்கும் நிலம் என்றைக்குக் கிடைக்கும் என்று எண்ணித் துடித்து மனம் வெதும்பி நடைபிணமாய் வாழ்கின்றனர்.

பரம்பரையாக நிலம் வைத்திருந்தவர்களும் கடன் தொல்லையால் இருக்கிற நிலத்தை விற்றுவிட்டு வேலை

www.tamilarangam.net



தேடி நகர்ப் புறங்களுக்குச் செல்லுகிற அவலம் அதிகரித்து வருகிறது.

நில வெளியேற்றத் தடைச் சட்டங்கள் இருந்தும் லட்சக் கணக்கான குடியானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

கிராமப்புறங்களிலுள்ள காவல்துறை நிலப்பிரபுக்களின் கையாட்களாகச் செயல்பட்டு வருகிறது.

ஏழை விவசாயிகளின் சாதாரண உரிமைகளைக் கூடச் சட்டத்தால் பாதுகாக்க முடியவில்லை.

பெருந்தனவந்தர்களும், நிலப்பிரபுக்களும் சட்டத்தையும், போலீஸையும் தன்னிஷ்டம் போல் பயன்படுத்தும் கருவிகளாகத்தான் செயல்படுத்தி வருகின்றனர்.

நிலப்பிரபுக்களின் நிலத்தை நஷ்டஈடின்றிப் பறிமுதல் செய்து, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அந்நிலத்தை இலவசமாக வழங்கினால்தான் கிராமமக்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் காணமுடியும்.

சட்டம் இயற்றுவதாலோ, நிலப்பிரபுக்களின் மன மாற்றத்தாலோ இது நிகழ்ந்துவிடாது.

மக்களை ஒன்று திரட்டி நிலங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். நிலமற்ற ஏழைகளுக்கு அவற்றை விநியோகம் செய்ய வேண்டும்.

பிறகு, இவற்றை அங்கீகாரம் செய்யும் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

தெலுங்கானா... இதைத்தான் செய்து காட்டியது.

விவசாயப் புரட்சியின் இந்தப் பேருண்மையை முன்னுக்குக் கொண்டு வந்த வரலாற்றுப் பெருமை தெலுங்கானா போராட்டத்திற்கு உண்டு.

ஏறத்தாழ 85 சதவீதமக்கள் கிராமத்திலே வாழ்கிறார்கள். இவர்களின் 'வாங்கும் சக்தி' அதிகரிக்கப்பட்டால் தான் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பண்டங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விற்பனையாகும்; தொழில் வளர்ச்சியும் ஏற்படும்.

இல்லாவிடில் தொழிற்சாலை உற்பத்திகள் விற்பனை-யாகாமல் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழாதான் நடத்த வேண்டி வரும்.

இன்று இதைத்தான் நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

தங்குதடையற்ற தொழில் வளர்ச்சிக்கே விவசாயப் புரட்சி ஒரு இன்றியமையாத் தேவை.

ஆனால் படிப்பினைகளை எல்லாம் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத நிலைதான் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் இருந்தது.

தெலுங்கானா போராட்டக் காலத்திலும், அதற்குப் பிறகும் கட்சிக்குள் முற்றிலும் மாறுபட்ட இரண்டு கருத்துக்கள் மோதிக்கொண்டிருந்தன. ஒன்று, ஆயுதப் போராட்டமே நடத்தியிருக்கக்கூடாது. நிலம் பறிமுதல் செய்து விநியோகம் செய்திருக்கக்கூடாது. மற்றொன்று, தெலுங்கானா போராட்டமும், நில வினியோகமும் சரியானதேயென்பது.

இதையொட்டிக் காங்கிரஸை ஆதரிக்கும் கொள்கையும் எதிர்க்கும் கொள்கையும் கட்சிக்குள் பலமாக மோத ஆரம்பித்தன. தெலுங்கானா போராட்டத்தின் அரசியல் விளைவுகள் இவை என்று கூறினால் மிகையாகாது.

1955க்குப் பிறகு கட்சியின் தலைமை, இப் படிப்பினை-களையெல்லாம் மறந்து தோல்வி மனோபாவத்தில் பல தவறுகளைச் செய்தது.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகளையும், கேரளாவில் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசாங்கத்தையும், சுட்டிக்காட்டிக் கேரளா வழியே நமது வழி என்றனர். அது மட்டுமல்லாது தெலிங்கானாப் போராட்டத்தையும் பகிரங்கமாகப் பழித்தனர்.

www.tamilarangam.net



"சோஷலிஸப் பாதையை நோக்கி முன்னேறுவோம்" என்ற நேருவின் கோஷத்தில் மயங்கித் திருத்தல்வாதப் பாதையில் சென்றனர். பொதுத்துறையைப் பலப்படுத்திக் கூட்டு சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து இந்தியாவைச் சோஷலிஸத்திற்கு அழைத்துச் செல்லுவோம்! பண்டித நேருவின் சீரிய தலைமையின் கீழ் இந்தியா முதலாளித்துவம் அற்றபாதையில் முன்னேறும்! நமது தாயகம் சோஷலிஸப் பொன்னாடாக மலரும் என்றெல்லாம் அர்த்தமற்ற வாய்ச்சொற்களை அள்ளித் தெளித்தனர்.

இந்தத் திருத்தல்வாதிகள் 'தெலுங்கானா விவசாயிகள் ஆயுதமேந்திப் போராடியிருக்கக் கூடாது. இந்தியாவின் இதர பகுதிகளில் இயக்கம் பலமடையாத அந்நேரத்தில் நிலவினியோகத்தில் ஈடுபட்டிருக்கக் கூடாது' என்று கூறித் தெலுங்கானா காட்டிய புரட்சிப்பாதையை மறுத்தனர்.

இந்திய அரசியலமைப்பின் வர்க்க அடிப்படை அறவே காண மறுத்தனர். தலைமையின் இந்தப் போக்கு கட்சியின் எல்லா மட்டங்களிலும் கடும் எதிர்ப்பைச் சந்தித்தது.

கருத்து மோதல் முற்றி 1964இல் கம்யூனிஸ்ட் இயக்கம் இரு கூறுகளாகப் பிரிந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உதயமானது.

இதைத் தொடர்ந்து ஒரு சிறு கும்பல் "மாசேதுங் வழியே எங்கள் வழி" என்று கோஷமிட்டு தற்கொலைக் கொப்பான பல நடவடிக்கைகளில் இறங்கியது.

இவர்கள் தெலுங்கானா போராட்டம் உருவான சிறப்புப் பின்னணியைப் புரிந்துகொள்ள மறுத்தனர். போராட்டத்தை வாபஸ் பெற்றதே தவறு எனக் கூக்குரலிட்டனர்.

இந்தியா ஆயுதப் போராட்டத்தின் விளிம்பிலே நிற்கிறது, இந்திய அரசும் அதன் தலைவர்களும் மக்களிடமிருந்து முழுமையாகத் தனிமைப்பட்டு இருக்கிறார்கள்.

இதுபோன்ற தவறான அரசியல் நிர்ணயிப்பில் இருந்து அதிதீவிர கோஷங்களை முழக்கினார்கள். மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய உணர்வு மட்டத்தையோ இந்தியாவின் யதார்த்த நிலையையோ அவர்கள் அறவே காண மறுத்தனர்.

தனிநபர் வன்முறைச் செயலில் ஈடுபட்டுப் புரட்சியைப் பூமிக்குக் கொண்டுவர முடியும் என்ற கற்பனைக் கருத்து-களைத் தோளில் தாங்கிய அவர்களது நடவடிக்கைகள் தோல்விக்கு மேல் தோல்வியைத்தான் சந்தித்தன.

இதேபோன்று இந்திய அரசியல் இயக்கத்தில் காணப்படுகிற ஒற்றுமையின்மையையும் பலவீனத்தையும் மட்டுமே கணக்கிலெடுத்துக் கொண்டு இந்திய மண்ணில் புரட்சிகரப் போராட்டங்கள் நடைமுறைக்கு ஒவ்வாதன என்று கூறும் திருத்தல்வாதமும் இந்தியாவின் யதார்த்த நிலையைக் காணத் தவறியது.

இன்றைய இந்தியக் கிராமங்கள் எந்த நிலையில் உள்ளன?

மூடநம்பிக்கைகள், குறுகிய ஜாதி, மத உணர்வுகள், பிரதேச உணர்வுகள் எல்லாம் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலைதான் கிராமப் புறங்களில்.

பழமையான, படு பிற்போக்கான இத்தகைய உணர்வுகள் கிராமங்களில் பற்றுக் கொண்டிருப்பதற்குப் பத்தாம் பசலி நிலவுடைமைதான் காரணம்.

தமது ஆட்சிக்குப் பக்கபலமாக இந்தப் பின்தங்கிய அமைப்பை நிலைநிறுத்த இந்திய அரசும், அதை நடத்திச் செல்லும் பெரு முதலாளிகளும், கங்கணம் கட்டிச் செயல்பட்டு வருகின்றனர். பிரபுத்துவத்தைப் பாதுகாத்து வருகின்றனர்.

இந்த நிலவுடைமை என்னும் கைவிலங்குகளை உடைத்தெறிந்தால்தான் மறுமலர்ச்சியும் கலாச்சாரப் புரட்சியும் இந்தியாவிலேயே வெற்றியடையும்.

நிலப்பிரபுக்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து விநியோகம் செய்யவேண்டும். அதுமட்டுமே தீர்வுக்கு வழி கோலும்.

www.tamilarangam.net



இந்தப் புரட்சிகரமான கடமையை நிறைவேற்ற வலுமிக்க கம்யூனிஸ்ட் கட்சி இன்றியமையாதது. அதன் தலைமையில் இயங்கும் வர்க்க அமைப்புகளும் தேவை.

உடனடியாக விவசாய மக்களை அணி திரட்ட

* தரிசு நிலத்திற்காக

* உச்சவரம்புச் சட்டத்தின் மிச்ச நிலத்திற்காக

* விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்காக

* சமூக ஒடுக்கு முறைக்கு எதிராக

என்பன போன்ற கிராமப்புற மக்களின் உடனடித் தேவைகளை மையமாக வைத்துப் போராட்டங்களை நடத்துதல் வேண்டும்.

இதன் மூலம்தான் விவசாயிகள் புரட்சிமிக்க-ஒரு வலுமிக்க அணியை உருவாக்க முடியும்.

நகர்ப்புறத்துத் தொழிலாளர்கள், கிராமப்புறத்து விவசாயிகள், சாதாரண மக்கள் இவர்களின் தளராத ஒற்றுமையில் கிளைத்து எழும் உணர்ச்சிமிக்க இயக்கங்கள், வலுவான போராட்டங்கள், மகத்தான தியாகங்கள் இவைகள்தான் இந்த அமைப்பின் அடிப்படையையே தகர்த்தெறிகிற புரட்சிப் புயல்கள்.

-ஆர்ப்பாட்டப் பேரலைகள். இவைதான் இன்றைய இந்தியாவின் தேவை.

தெலுங்கானாவின் படிப்பினைகள்,

நமக்கு விடுக்கும் அறைகூவல் இதுதான்.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

****

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்ப்
புத்தகாலயம்

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்